

# நான் கண்ட எம்.ஜி.ஆர்

நவீனன்


Gluco MONACO
B.S.C.



# நான் கண்ட எம்.ஜி.ஆர்

நவீனன்

முதற் பதிப்பு மே 1983

மோஹ பப்ளிகேஷன்ஸ்

ரூபாய் 2.50

அச்சிட்டோர்

ராஜி பிரிண்டர்ஸ்
சென்னை-29

# என்னுரை

"எம். ஜி. ஆரைப் பற்றி எழுதுங்கள். முப்பது ஆண்டுகளாக அவரை அறிந்திருப்பதாகச் சொன்னீர்களே?" என்றார் ஆசிரியர் சாவி அவர்கள்.

அந்தத் தூண்டுகோல்தான் என்னுடைய பேனாவில் உற்சாகம் என்னும் மையை நிரப்பியது.

நடிகர், நட்சத்திர நடிகர், புரட்சி நடிகர், புரட்சித் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர்—என்று பலவிதமான எம். ஜி. ஆரை நான் அறிந்து வைத்து இருக்கிறேன்.

அவற்றில் சில எம். ஜி. ஆரைப் பற்றி மட்டுமே எழுதி இருக்கிறேன். இவை என் நினைவில் இருந்து சிதறிய துளிகள். முழு எம். ஜி. ஆரை அப்படியே உருவகப்படுத்திக் காட்டி விட்டேனா என்றால் இல்லை என்பதே பதில்.

எனவே எம். ஜி. ஆர். பற்றிய முழுநீள வரலாற்று நூல் இது என்று எண்ணிவிட வேண்டாம்! அதனால்தான் முன் ஜாக்கிரதையாக 'நான் கண்ட எம். ஜி. ஆர்.' என்று இதற்குப் பெயர் சூட்டினேன்.

இதில் நான் கண்ட எம். ஜி. ஆர். திருப்தியாக இடம் பெற்றிருக்கிறார். அவருடைய பலவிதமான குண இயல்புகள், மன மாண்புகள், குறிக்கோள்கள், கொள்கைகள் ஆகியவற்றைச் சொல்லி இருக்கிறேன்.

நடிப்புத் துறைக்கு வந்த அவர் நாட்டுக்குத் தேவையான நற்கருத்துக்களைத் தாம் ஏற்ற பாத்திரங்களின் வாயிலாகச் சொல்லி, மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றார். அந்தச் செல்வாக்கு அவருடைய சொல்வாக்கினால் கிடைத்தது.

அவர் திரைப்படங்களில் சில கதாபாத்திரங்களில் தோன்றியபோது அவற்றை மறந்து மக்கள், மக்கள் திலகமாகவே அவரைக் கண்டார்கள். அவர் நல்லவர், வல்லவர், நாட்டுக்கு நல்லதையே செய்வார் என்று நம்பினார்கள். அந்த அசைக்க முடியாத நம்பிக்கையோடுதான் இன்று அரசாட்சியைத் தூக்கி அவர் கையில் கொடுத்து இருக்கிறார்கள்.

எம். ஜி. ஆர். அரசியலுக்கு வந்ததில் அவருக்கு எவ்வித ஆதாயமுமில்லை. பதிலாகப் பல பிரச்னைகளுக்குப் பதில் சொல்ல வேண்டியதிருக்கிறது. மாற்றுக் கட்சியினரின் மனோபாவம் அறிந்து அவர்களின் கண்டனங்களுக்கு ஈடு கொடுக்க வேண்டியதிருக்கிறது.

பதிலாக எம். ஜி. ஆர். சினிமாவில் தொடர்ந்து நடித்து இருந்தால் பல லட்சங்களைச் சம்பாதித்து நிம்மதியாக இருந்து இருக்கலாம். ஆனால், ஒரு சூழ்நிலையில் அவர் அரசியலில் தீவிரமாக இறங்க வேண்டியதாகி விட்டது.

புரட்சி நடிகர் இப்போது புரட்சித் தலைவராக, தமிழக முதல்வராக இருந்தாலும் அவரிடம் மண்டிக் கிடக்கும் கலையுள்ளம் மங்கிவிடவில்லை. கலைத் தொடர்புள்ள விழாக்களில் அவர் பேசும் போது அவரது ஆர்வம் அதில் பொங்கிப் பேச்சாக வந்து கொண்டு இருக்கிறது.

கலைஞராக இருந்தாலும் சரி, முதல்வராக இருந்தாலும் சரி, மக்களுக்குத் தொண்டு செய்வதை அவர் மறந்து விடுவது இல்லை.

அவர்தான் நான் கண்ட எம். ஜி. ஆர்.

அப்படிப்பட்ட பொன்மனச் செம்மல் நம்மிடையே இருந்து வருவது நமக்குப் பெருமை.

'நடிப்பவர் நாடாள முடியுமா?' என்ற வினாவுக்குப் புரட்சி நடிகரே விடையானார். அனைத்திந்தியாவே ஆச்சரியப்படும்படி இன்று தமிழக முதல்வராகப் பணியாற்றி வருகிறார்.

எம். ஜி. ஆர். முதல்வரான பின் அவருடன் பழகச் சந்தர்ப்பம் இல்லாமல் போயிற்று. எங்காவது சந்தித்தால், ''எப்படி இருக்கிறீர்கள்? சௌக்கியமா?'' என்று விசாரிப்பார்.

ஒரு முறை பம்பாயிலும், இன்னொரு தடவை சென்னையிலும் எம். ஜி. ஆர். அன்புடன் என்னை விசாரித்து இருக்கிறார். பிறகு அவர் கண்களில் நான் சிக்கவில்லை.

ஆகவே அவர் ஒரு புரட்சி நடிகர் என்பதுவரை — கலையுலகத் தொடர்பு வரை—எழுதி இந்தச் சிறுநூலை முடித்து விட்டேன். பூவாளி, சுஜாதா—பத்திரிகைகளில் வெளிவந்த இந்தத் தொடர்கட்டுரைகள் புத்தகமாக வெளிவர என்னை மீண்டும் தூண்டியவர் ஆசிரியர் சாவி அவர்கள்தான்.

அவருக்கு என் இரட்டை நன்றிகள்.

விரைவாக ஒரே மூச்சில் படித்து முடித்து விடுகிற அளவுக்கு அமைந்துள்ள இந்தச் சிறு புத்தகம் வாசகர்களைச் சிந்திக்க வைக்குமா என்று எனக்குத் தெரியாது. தெரியும்—

சிரமப்படுத்தாது என்று.

பத்திரிகைகளில் தொடர்ந்து படித்தவர்களும், படிக்காதவர்களும் இப்போது நூல் வடிவத்தில் வாங்கிப் படித்துச் சுவைப்பார்கள் என்று நம்புகிறேன்.

—நவீனன்

# 1



திரைப் படங்களில் இரட்டை வேடம் புனைந்து வெற்றி பெற்றார் எம். ஜி. ஆர். அரசியலில் இரண்டு விரல்களைக் காட்டித் தேர்தலில் பெரு வெற்றியைக் குவித்தார் எம். ஜி. ஆர்.

எம். ஜி. ஆருக்கு 'இரண்டு' அன்றும் இன்றும் வெற்றியைத் தந்து வந்திருக்கிறது.

சினிமாவில் புரட்சி நடிகர்; அரசியலில் புரட்சித் தலைவர்; கையெழுத்திடுவது எம். ஜி. ராமச்சந்தர். அழைக்கப் பெறுவது எம். ஜி. ராமச்சந்திரன். இப்படி இரண்டு, அவரைப் பொருத்த வரை, தொடர்ந்து கொண்டே வருகிறது!

உலகில் ஒரு சிலருக்குத்தான் மக்களைத் தங்கள் உருவத்தால் கவருகிற தனித்தன்மை உண்டு.

கென்னடி, ஜவாஹர்லால் நேரு, சர். சி பி. ராமசாமி ஐயர் இந்த வரிசையில் எம். ஜி. ஆரும் இடம் பெற்றவர். உருவத்தைத் தவிர, உள்ளத்தினால், சிரிப்பினால், பேச்சினால், நடிப்பினால், உயர் பண்பினால், அரசியல் ஞானத்தால் இந்த உலகையே கவர்ந்திருக்கிறார்.

என்னை இவர் கவர்ந்த இடம் சென்னை கீழ்ப்பாக்கத்தில் ஒரு வீட்டிற்குள். சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் அந்த வீட்டிற்குள் இரண்டு கூர்க் கத்திகள் மோதிக் கொண்டன. சில முட்கத்திகள் முட்டிக் கொண்டன. ஒரு கத்தியை ஏந்திக் கொண்டிருந்தவர் எம். ஜி. ஆர். எதிரில் இன்னொரு கத்தியுடன் காணப்பட்டவர் பி. எஸ். வீரப்பா.

'ஜெனோவா' என்ற படத்திற்காக அவர்கள் இருவரும் கத்திச் சண்டை பயிற்சி செய்து கொண்டு இருந்தபோது அங்கு நான் போனேன். வேர்வை வழிந்தோட எம். ஜி. ஆர். என்னைக் கை குவித்து வணங்கினர். ''பாருங்கள், எப்படி எல்லாம் கஷ்டப்பட்டுக் கத்திச் சண்டை பழகிக் கொள்கிறோம்? பத்திரிகைக்காரர்கள் சில பேர் இதை எல்லாம் சரிவரத் தெரிந்து கொள்ளாமல், 'அட்டைக் கத்தி வீரர்கள்' அப்படி, இப்படி என்று எழுதி வைக்கிருர்களே?'' என்ருர். முகத்தில் சிறு வேதனையின் ரேகைகள்.

''அந்தச் சில பேரில் நான் ஒருவன் இல்லை!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னேன்.

''அது எனக்குத் தெரியும்'' என்று பெருந்தன்மையோடு சிரித்து ஆமோதித்தார். வீரப்பாவும் சிரித்தார். (படங்களில் வீரப்பா சிரிப்பதற்கும் அப்போது சிரித்த சிரிப்பிற்கும் சம்பந்த மில்லை!)

''தம்பி அப்படிப்பட்டப் பத்திரிகைக்காரர் இல்லீங்க'' என்று வீரப்பா சொன்னர். 'வில்லன்' வாயினல் நல்வாக்கு!

எனக்காகச் சில நிமிடங்கள் கத்திச் சண்டை நின்றது. தொடை மீது தன் கத்தியைப் படுக்கப் போட்டுக் கொண்டே எம். ஜி. ஆர். அப்போது நான் பணியாற்றி வந்த 'கலை' என்ற சினிமாப் பத்திரிகைக்குப் பேட்டி கொடுத்தார்.

'இன்னொரு சமயம் போன் செய்து விட்டு வாருங்கள். இப்போது முக்கியமான சண்டைக் காட்சிக்காகக் கத்திச் சண்டை பயிற்சி செய்து கொண்டிருக்கிறேன்' என்று அவர் என்னிடம் சொல்லி அனுப்பி வைத்திருந்தாலும் ஆச்சரியப் படுவதற்கு இல்லை. ஆனல் பேட்டிக்கு என்று வந்து விட்டவரை அப்படி எல்லாம் அனுப்பி வைப்பது முறையாகாது என்று அன்றே அவர் புரிந்து வைத்திருந்தார்.

ஒரு நடிகரின் முன்னேற்றம் அவரது சொந்தத் திறமையில் மட்டுமின்றி, பத்திரிகைக்காரர்களின் பேனவிலும் இருக்கிறது என்பதை நன்கு அறிந்திருப்பவர் அவர். அதனல்தான் எந்தப் பத்திரிகையிலாவது அவரைப் பற்றித் தவருன செய்தி வந்து விட்டால் பதறி விடுவார் ''பதறி.

சிவந்த முகம் மேலும் சிவந்து விடும். இப்படியும் அப்படியும் நடப்பார். டெலிபோன் செய்து மறுப்புத் தெரிவிக்கலாமா, மறுப்பை எழுதி அனுப்பி வைக்கலாமா என்று சிந்திப்பார்.

'போனல் போகட்டும்' என்று மட்டும் எண்ணி விட மாட்டார். இது எம். ஜி. ஆரின் குணம்.

குறிப்பிட்ட பத்திரிகைக்காரரை எங்கு கண்டாலும் அதைப் பற்றிக் கேட்டு விடுவார். "செய்தி போடுவதற்கு முன் என்னிடம் ஒரு வார்த்தை டெலிபோன் செய்து கேட்டிருக்கலாமே?" என்பார். அது எப்படித் தவருன செய்தி என்பதற்குப் பல ஆதாரங்களைப் புட்டுப் புட்டு வைப்பார். அதேபோல அவரைப் பாராட்டிச் செய்தி வந்தாலும் 'படித்தேன்' என்று கண்ணியமாகச் சொல்லுவார். வாயை ஓரளவு கைக்குட்டையினுல் மூடிக் கொண்டு சுமாராகச் சிரித்து நன்றி தெரிவிப்பார். ஒரு சிலரைப் போலத் தவறுக்கு மட்டும் கண்டனம் தெரிவிப்பவர் அல்ல அவர்.

யாரையாவது ஒருவரை எம். ஜி. ஆர். ஒரு தடவை பார்த்து விட்டால் நினைவுப் பட்டியலில் அழியாத மையினுல் எழுதிக் கொண்டு விடுவார்.

என் விஷயமும் அப்படித்தான். 'ஜெனேவா' படப்பிடிப்பின் போது சிட்டாடல் ஸ்டுடியோவில் என்னை எம். ஜி. ஆருக்கு அறிமுகம் செய்து வைத்தவர் வில்லன் வீரப்பா.

"தம்பி நல்லா எழுதும்" என்று வீரப்பாவின் அறிமுக வாசகங்கள் அமைந்திருந்தன. அதைக் கேட்டுச் செழிப்பாகச் சிரித்தார் எம். ஜி. ஆர்.

'ஏன் சிரித்தார் எம். ஜி. ஆர்?' என்னுள் ஒரு வினு வட்ட மிட்டுக் கொண்டே இருந்தது.

# 2

"நான் ஏன் சிரித்தேன் என்று உங்களுக்குத் தெரிய வேண்டும். இல்லையா?"—கம்பீரமாகக் கேட்டார் எம். ஜி. ஆர்.

"ஆமாம்" என்றேன்.

"உங்களைத்தான் ஏற்கெனவே எனக்குத் தெரியுமே? அண்ணன் (அதாவது பி. எஸ். வீரப்பா)அறிமுகப்படுத்தும் போது பேசாமல் இருந்தேன். 'தெரியும்' என்று நான் குறுக்கிட்டிருந்தால் அவர் உங்களைப் பற்றி வைத்திருக்கும் நல்லெண்ணத்தைச் சொல்ல முடியாமல் நேர்ந்திருக்கும்!"

நியாயமாகச் சொல்ல வேண்டுமென்ருல் எம். ஜி. ஆரை நான் சந்தித்த முதல் இடம் ஜுபிடர் நிறுவனம். (இப்போது அந்த இடத்தில் 'குமுதம்' பத்திரிகை அலுவலகம் இருந்து வருகிறது.)

ஜுபிடர் படக் கம்பெனி முதலாளிகளான எஸ்.கே. மொகிதீன், சோமசுந்தரம் ஆகிய இருவரையும் அண்ணன் எம்.ஜி. சக்ரபாணி, தம்பி எம். ஜி. ஆர். ஆகிய இருவரும் பார்க்க வருவார்கள்.

அப்போது எம். ஜி. ஆர், என்னுடன் பேசியது இல்லை. மொகிதீனின் அறைக்குள்ளிருந்து நான் வருகிறபோது, 'அவருக்கு வேண்டிய ஒருவர்' என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தார்.

ஜுபிடர் பட நிறுவனத்தின் முன் பக்கத்து அறையில் பெரிய மேசை போடப்பட்டு, அதில் செய்திப் பத்திரிகைகள் கிடக்கும். அவற்றை ஆழ்ந்து எம். ஜி. ஆர். படிப்பார். சில மணி நேரம் காத்திருந்து அந்தப் பட முதலாளிகளைச் சந்திக்கும்படி இருக்கும் என்று தெரிந்து வைத்திருந்த எம். ஜி. ஆர். அந்த நேரத்தை வீணுக்காமல் பத்திரிகை படித்து உலகச் செய்திகளை, அரசியலைத் தெரிந்து கொள்வதில் ஈடுபட்டார். அந்த நாட்கள் அவரைச் சிறந்த செய்தி ஞானம் கொண்டவராகப் பக்குவப்படுத்தின.

பத்திரிகை படிப்பதை அவர் பொழுது போக்காக வைத்துக் கொள்ளாமல் தேவையானதாகக் கருதினுர். அந்தப் பழக்கம் அவருக்கு அரசியல் உலகைக் காட்டியது. ஆனுல் அவர் அப்போது அரசியலில் ஈடுபடவில்லை. புரிந்து கொண்டார்.

அப்போது இருந்த நிலை அவர் சினிமாவில் சேர்ந்து நடிக்க வேண்டும் என்பது. எனவே பிழைப்புக்குச் சினிமாவும் மனத்திற்கு அரசியல் அறிவும் தேவைப்பட்டன.

'ராஜகுமாரி' என்ற படத்தின் வாயிலாக எம். ஜி. ஆர். கதாநாயகருக்குரிய தகுதி பெற்ருர். பிறகு சில ராஜா ராணிக் கதைகளில் பிரதம பாகங்களில் நடித்தார். ஜுபிடர் தயாரிப்புக் களில் எம். ஜி. ஆரே தொடர்ந்து கதாநாயக வேடமேற்று அவர்களுக்குப் பண வசூலைக் குவித்துக் கொடுத்தார்.

அவை எல்லாம் இலட்சிய எம். ஜி. ஆரைக் காட்டவில்லை.

அறிஞர் அண்ணுவின் சந்திப்பு ஏற்பட்ட பிறகு, பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பகுத்தறிந்து பார்த்த பின் சிந்திக்கத் தொடங்கினுர். கலைஞர் கருணுநிதியின் கனல் தெறிக்கும் வசனங்களில் அவர் சில கொள்கைகளைப் புகுத்தி இருப்பதை

அவர் தெரிந்து கொண்ட பின்னர் இன்னெரு எம். ஜி. ஆரை என்னுல் பார்க்க முடிந்தது. அதுவரை அரச வம்சத்து ஆடம்பர ஆடைகளுக்குள் தன்னைப் புகுத்திக் கொண்டு படங்களில் நடித்து வந்தவர், முடிந்தவரை கொடுங்கோல் மன்னர்களுக்கு எதிராக மூண்டெழுந்தார். புரட்சிக்காரராகவும், நேர்மைக்காகப் போராடும் வீரத் தளபதியாகவும் வேடங்கள் ஏற்ருர். 'மக்களாட்சி ஒரு நாள் மலர்ந்தே தீரும்' என்று முழக்கினுர்.

சமூகப் பட நாயகராக எம். ஜி. ஆர். மாறிய காலம்தான் பொற்காலம். கதாபாத்திரங்களின் பெயர்களை மறந்து எம். ஜி. ஆரே நினைவுக்கு வந்தார். 'கலை ஒரு சிறந்த பிரசார சாதனம்; மக்களின் மனத்திலே சில கதாபாத்திரங்களின் வாயிலாக நற் கருத்துக்களை விதைத்து விட முடியும்' என்று நிரூபித்துக் காட்டினுர். அதற்கு அறிஞர் அண்ணு, கலைஞர் ஆகியவர்களின் அப்போதைய உரையாடல்கள் அவருக்கு உதவின.

எம். ஜி. ஆர். ரசிகர்கள் பெருகினுர்கள். அவர் நடித்த படங்களைப் பார்த்துவிட்டு, 'எம். ஜி. ஆர். இப்படிச் சொல்லி இருக்கிருர்' என்று பேசிக் கொண்டு போனுர்கள்.

'பாசம்' என்று ஒரு படம். எம். ஜி. ஆர். அதில் கதாநாயகர். டி. ஆர். ராமண்ணு இயக்கித் தயாரித்தது. அந்தப் படம் சென்னை பாரகன் தியேட்டரில் திரையிடப்பட்ட போது ஒரு சம்பவம் நடைபெற்றது.

# 3

'பாசம்' படத்தின் கதையமைப்பின்படி இறுதிக் காட்சியில் கதாநாயகன் எம். ஜி. ஆர். இறந்து போவது போலப் படத்தை முடித்து இருந்தார்கள். அந்த முடிவை எம். ஜி. ஆர். ரசிகர்கள் ஏற்கவில்லை.

'எங்கள் எம். ஜி. ஆர். இறந்து போவதாவது?' என்று குமுறினுர்கள். நாற்காலிகளிலிருந்து தாவினுர்கள். வெள்ளைத் திரையை நோக்கிப் பாய்ந்தார்கள். அதைக் கிழித்து எறிந்தார்கள். ''எம். ஜி. ஆர். வாழ்க!'' என்று உணர்ச்சியோடு குரல் எழுப்பினுர்கள்.

எதிரில் அதுவரை பார்த்தது சினிமாப் படம், அதில் வருகிற 'காரக்டர்'தான் இறந்து போனது என்று நினைக்கும் நிலையில் ரசிகர்கள் இல்லை.

அந்த அளவுக்கு எம். ஜி. ஆர். ஏற்கும் பாத்திரங்களில் எல்லாம் அவர்கள் எம். ஜி. ஆரையே பார்த்தார்கள். அந்த ஆச்சரியமான நினைப்பு—

எம். ஜி. ஆர். கடைசியாக நடித்து முடித்த படம் வரை அவர்களிடம் பதிந்து கிடந்தது. உலக சினிமா நடிகர்களில் வேறு யாருக்கும் அப்படிப்பட்ட சிறப்பை அவர்கள் அளித்தது இல்லை.

ஒரு படத்தை ஒப்புக் கொள்வதற்கு முன்னால் கதை என்ன, அதில் தன்னுடைய பாத்திரத்தின் தன்மை எப்படிப்பட்டது என்பதை அறிந்து கொள்வார். திருப்தி இல்லையென்றால் நடிக்க ஒப்புக்கொள்ள மாட்டார். தான் படங்களில் ஏற்கும் கதாபாத்திரம் தனக்காக அல்ல என்று கருதினார். அதன் வாயிலாக மக்களுக்கு ஏதேனும் நீதிகளைச் சொல்லிவிட முடியுமா என்று பார்ப்பார். பாடல்களிலும் அண்ணாவின் கொள்கைகளுக்குத் தக்கவாறு வரிகளை அமைக்கச் சொல்வார்.

தப்பித்தவறி நகைச்சுவையின் பெயரால்கூடக் கொள்கைக்கு விரோதமான சொல் வந்துவிடக் கூடாது என்பதில் ஆழ்ந்த கவனம் செலுத்துவதை நான் பல தடவை கண்டிருக்கிறேன். தான் நடிக்காத காட்சிகளில் அவை புகுத்தப்பட்டுப் படமாகி இருந்தாலும் 'எடிடிங்'கில் வெட்டி எறிந்துவிடச் சொல்வார்.

பொதுவாக நடிகர்கள் படப்பிடிப்பு முடிந்ததும் அடுத்த படத்தில் கவனம் செலுத்துவார்கள். ஆனால் எம். ஜி. ஆர்? 'எடிடிங்' அறையில் உட்கார்ந்து கொண்டு இருப்பார்! படம் விறுவிறுவென்று ஓட 'ஷார்ப் எடிடிங்' செய்யச் சொல்வார். தேவையில்லாததை வெட்டி எறியுமாறு கூறுவார். அந்தக் கலையிலும் அவர் வல்லவர். அவரது 'எடிடிங்' திறமையைப் பல பிரபல இயக்குனர்கள் பாராட்டி இருக்கிறார்கள்.

தி. மு. க.வில் சேர்ந்து, அறிஞர் அண்ணாவின் கொள்கைகளில் பிடிப்பு ஏற்பட்ட பிறகு எம். ஜி. ஆர். நடித்து வெளிவந்த பல படங்கள் கொள்கை முழக்கம் செய்யும் முரசாகவே அமைந்தன.

குறிப்பிட்ட கதைக்கு இன்னும் எப்படி எப்படி மெருகிடலாம் என்று கருத்துச் சேர்ப்பதில் அவர் நிபுணர். இணைந்து நடிக்கும்



அறிஞர் அண்ணாவுடன்...



நடிகை, பாடலாசிரியர், இயக்குனர், வசனகர்த்தா, காமராக்காரர், உடைக் கலைஞர்—ஆகியோரை ஏற்பாடு செய்வதிலும் இவருடைய ஆலோசனை இருக்கும். அவர்களுக்குப் படத்தில் நல்ல பெயர் கிடைக்க உதவுவார். தகுந்த ஊதியமும் கிடைக்கும்படி செய்வார். இவருடன் படங்களில் இணைந்து நடித்த பானுமதி, பி. சரோஜா தேவி, சாவித்திரி, ஜெயலலிதா, லதா போன்றவர்கள் நட்சத்திர மதிப்புப் பெறவும், பெரும் தொகையை ஊதியமாக அடையவும் இவரது ஈடுபாடே காரணம்.

துணை நடிகர், நடிகைகளுக்கு ஒரு தொல்லை என்றால் இவர் ஓடிச் சென்று உதவுவார். ஸ்டண்ட் நடிகர் படப் பிடிப்புக்கு நடுவே காயமடைந்து மருத்துவ விடுதியில் சேர்க்கப் பட்டிருக்கிறார் என்று அறிந்துகொண்டால் எப்படிப்பட்ட முக்கிய பணிகள் இருந்தாலும் இதுதான் அதைவிட முக்கியம் என்று அங்கு போய் உடல் நலம் விசாரிப்பார். இடது கைக்குத் தெரியாமல் வலது கையைச் சட்டைப் பைக்குள் விட்டுக் கற்றை பண நோட்டுக்களை எடுத்து அவரது தலையணைக்கு அடியில் வைப்பார்.

ஒரு தடவை கண்ணன் என்ற வில்லன் நடிகர் 'காவல்காரன்' படத்திற்குரிய சண்டைக் காட்சியில் ஒத்திகை யின்போது கால் பிசகி விழுந்து விட்டார்.

அதனால் படப்பிடிப்பில் அவர் கலந்து கொள்ள முடியவில்லை. அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்த செய்தி அன்று இரவு பதினொரு மணிக்குத்தான் எம்.ஜி.ஆருக்கு எட்டியது. முடிவடைய வேண்டிய முக்கியமான ஒரு படம்—இரவு நேரப் படப்பிடிப்பு.

மேக்கப்பைக் கலைக்காமல் கண்ணனைக் காண மருத்துவ மனைக்கு நள்ளிரவில் சென்றார். அந்தப் படத்தில் கண்ணனுக்குச் சிறிய பாத்திரந்தான். ஆனாலும் பத்து நாட்கள் வரை படப்பிடிப்பை நிறுத்தச் சொல்லி, கண்ணனின் கால் சரியாகி வந்த பிறகே படப்பிடிப்பைத் தொடங்குமாறு சொல்லி விட்டார்.

நடிகர் சிவசூரியனை ஒரு சமயம் நான் கிண்டல் செய்து ஒரு பத்திரிகையில் எழுதி விட்டேன். அவர் எம். ஜி. ஆரிடம் முறையிட்டுக் கொண்டார். தொலைபேசியில் எம். ஜி. ஆர். என்னை அழைத்தார்.

# 4

மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் ஒரு மரத்தடி. போதி மரத்துப் புத்தர் போல அதற்கு அடியில் எம். ஜி. ஆர். அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றிச் சில கழகப் பிரமுகர்கள்; கால்ஷீட் பெற வந்திருந்த படத் தயாரிப்பாளர்கள்.

போனேன். என்னைக் கண்டதும் தனியாக அழைத்துச் சென்றார். அதில் ஒரு பண்பாடு இருந்தது. 'என்ன, இப்படி எழுதி விட்டீர்கள் சிவசூரியனைப் பற்றி?' என்று எல்லாருக்கும் முன்னால் சிடுசிடுவென்று கேட்காத பெருந்தன்மை அவரோடு வந்தது.

என் தோள்மீது தமது வலுவான, வழவழப்பான கையைப் போட்டுக் கொண்டே பல அடிகள் நடந்து கொண்டே, ''சிவசூரியனைப் பற்றி 'தென்றல் திரை'யில் நீங்கள் எழுதியிருந்ததை நானும் படித்தேன். உங்களுடைய கிண்டலுக்கு எல்லாம் அவர் தாங்க மாட்டார்! வாழ்க்கையில் அதிக வாய்ப்பில்லாத துணை நடிகர்கள், நடிகைகளைத் தாக்கி எழுதாதீர்கள். அது, எருதுவின் புண்ணைக் காக்கை கொத்துவது போல!'' என்று கண்ணியமாக எம். ஜி. ஆர். என்னிடம் சொன்னார்.

அவரது உபமானம் என் உள்ளத்தை மட்டுமல்ல, என் பேனாவையும் அன்று தொட்டது. அது முதல் அப்படிப்பட்டவர்களைப் பற்றி நான் கிண்டல் செய்வது இல்லை; தாக்கியும் எழுதுவது இல்லை.

அப்படி ஒரு முடிவை மேற்கொண்டேன். எம்.ஜி. ஆரிடமும் அதைச் சொன்னேன். என் கைகளைப் பற்றிக் குலுக்கி, ''இதை உங்களிடம் போனிலேயே சொல்லி இருப்பேன். ஆனால் நான் அதைச் சொல்லும் போது உங்களுடைய 'ரியாக்ஷன்' எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்ளவே நேரில் வரச் சொன்னேன். உங்கள் உள்ளக் கண்ணாடியை முகத்தில் கண்டு விட்டேன். எனக்குத் திருப்தி உங்களுடைய பதில்'' என்றார் எம். ஜி. ஆர்.

ஏவி. எம். படப்பிடிப்பு நிலையத்தில் 'அன்பே வா' படத்தில் நடித்துக் கொண்டிருந்தார்.

பிரும்மாண்டமான அரங்கு. ஏகப்பட்ட அலங்காரங்கள். ஏவி. எம். தயாரிப்பில் எம்.ஜி.ஆர், முதல் தடவையாக நடிக்கும்

படம் அது. அவரைச் சுற்றி வழக்கம்போலக் கழகப் பிரமுகர்களும் நண்பர்களும் கூடியிருந்தார்கள். எம். ஜி. ஆர்—

சிலரைச் சிரிப்பினால் குளிப்பாட்டினார். வேறு சிலரை முதுகில் அன்போடு குத்தினார். மற்றும் சிலரிடம் காதோடு ஏதோ பேசினார். ஷாட் தயாரானதும் அவ்வளவு பேரிடமிருந்தும் விடுபட்டு நடிக்க வந்து விட்டார். அவர்தான் எம். ஜி. ஆர்.— செய்யும் தொழிலுக்கு முதலிடம் தருகிறவர்.

ஏவி. எம் படத்தில் நடிக்க எம். ஜி. ஆர். வந்திருக்கிறார், ஸ்டுடியோ சில நாட்களாகப் பிரமாதப்படுகிறது என்று கேள்விப்பட்ட நான், ஒரு நாள் படப்பிடிப்பைப் பார்க்கச் சென்றிருந்தேன். எம். ஜி. ஆர். என்னைக் கண்டு விட்டுக் கைகளைக் கூப்பி வணங்கினார்.

'உங்களுடன் பேச வேண்டும், இருங்கள்' என்று சொல்லுவது போல சாடை காட்டி உட்காரச் சொன்னார்.

இடைவேளையின்போது என்னுடன் பேசினார். என் காதோடு அவர் பேசிய இரகசியப் பேச்சில் ஒரு பெருமிதம் காணப் பட்டது. "முன்பு ஒரு சமயம் உங்களிடம் சொன்னேனே நினைவு இருக்கிறதா? விரைவில் ஏவி. எம். படத்திலும், ஜெமினி படத்திலும் நடிக்க என்னை அழைப்பார்கள் என்று. அவர்கள் இருவரும் அழைத்து விட்டார்கள். சந்தர்ப்பங்களைச் சில சமயங் களில் நாம் தேடிப் போக வேண்டும். சில சந்தர்ப்பங்கள் நம்மைத் தேடி வரும். இதில் இரண்டாவதுதான் சிறப்புடையது.''

ஏ. வி. மெய்யப்பன் அவர்கள் ஒருவரிடம் ஒரு படத்தின் பொறுப்பை ஒப்படைத்து விட்டால் அவரை அனாவசியமாகத் தொல்லைப்படுத்த மாட்டார். படம் நன்கு அமைய எல்லா வசதிகளும் செய்து கொடுப்பார். பணச் செலவைப் பார்க்க மாட்டார். 'அன்பே வா' படத்தை ஏ. சி. திருலோகசந்தரை இயக்கச் சொல்லிவிட்டு, படப்பிடிப்பு அறைப் பக்கமே வராமல் நிம்மதியாக இருந்தார் ஏவி. எம்.

அன்று பெரிய செட்டில் எம். ஜி. ஆர். தொடர்புள்ள பிரும்மாண்டமான படப்பிடிப்பு நடக்கிறது என்ற காரணத்தி னாலோ என்னவோ ஏவி. எம். ஏதோ ஒரு சாதாரணப் பார்வையாளரைப் போல வந்தார்.

எந்தக் கெடுபிடியும் இல்லை. 'ஏவி. எம். வருகிறார் பராக்!' என்ற எச்சரிக்கை கோஷம் கிடையாது. அவர் பரம சாதுவாக, பெரியவர்களுக்குரிய அடக்கத்துடன் கதருடைகள் அணிந்து கூட்டத்தோடு கூட்டமாகக் காணப்பட்டார்.

ஏவி. எம். வந்திருப்பதைக் கவனித்து விட்டு எம். ஜி. ஆர். விரைந்து சென்று அவரை வணங்கினர்.

அப்போது தென்னுட்டுப் படவுலகில் எம். ஜி. ஆர். உச்சக் கட்டத்தில் இருந்த நேரம். அவரது பெயர் ஒரு புதுப் பட அறிவிப்பில் காணப்படுமானல் அவ்வளவு ஏரியாக்களும் முதல் நாள் படப்பிடிப்பின் போதே விற்று விடும். அப்படிப்பட்ட நட்சத்திர நடிகர் எம். ஜி. ஆர்., ஏவி. எம்.முக்கு முன்னுல கையைக் கட்டிக்கொண்டு பணிவுடன் நின்ற காட்சி என்னைச் சிலிர்க்கச் செய்துவிட்டது!

# 5

பெண் இனத்திற்கு, அதுவும் அன்னை என்ருல் தனி மரியாதை கொடுத்துப் படங்களில் நடிப்பது புரட்சி நடிகரின் படிந்து போன பண்பாடு. சிறு வயதில் தன்னை வளர்த்துப் பண்புள்ள ஒரு மனிதனுக்க அவரது அன்னை சத்யபாமா பட்ட பாடுகள் அவரது உள்ளத்தில் இன்றும் செய்திப் படமாகவே ஓடிக்கொண்டு இருக்கின்றன.

தாய், தாயுள்ளம் என்று பேச்சு வந்தால் எம். ஜி. ஆரின் குரல் தழுதழுத்து விடும்; கண்கள் கலங்கி விடும். பல முறை பார்த்திருக்கிறேன்; படங்களில் எம். ஜி. ஆருக்கு அன்னையாக நடித்துள்ள பண்டரி பாய் போன்ற நடிகைகளுக்கு முன் அவர், "அம்மா!" என்று அலறிக் கொண்டு ஓடும் போதும், கண்கள் கலங்க வசனங்கள் பேசும் போதும் அது நடிப்பாக இருப்பது இல்லை. அந்தச் சமயம் சத்தியபாமா பெற்றெடுத்த உத்தமப் புத்திரனுகவே மாறி விடுவார்.

காதல் காட்சிகளில் எம். ஜி. ஆர். அவ்வளவு நெருக்கமாக நடிப்பது இல்லை என்று தமிழ்ப் படவுலகில் சிலர் குறைப்பட்டுக் கொண்டார்கள். அப்போது 'காதல் மன்னன்' என்ற பட்டம் ஜெமினி கணேசனுக்குக் கிடைத்திருந்தது. ஓர் அளவுக்கு மேல் காதல் காட்சிகளில் ஈடுபடுவது அருவருப்பை உண்டாக்கும் என்றுதான் எம். ஜி. ஆர். கருதினர். ஆனல் வேறு சிலர் அதை வேறு விதமாகக் கயிறு திரித்துச் சினிமா வட்டாரத்தில் பேசினர்கள்.

'எம். ஜி. ஆர். வெறும் ஸ்டண்ட் நடிகர்தான்; காதல் காட்சிகள் அவருக்குச் சரிப்பட்டு வராது' என்று அதை வைத்து சினிமா வட்டாரங்களில் தவறாக எடை போட்டார்கள்.

எம். ஜி. ஆர். அந்தப் பேச்சு பற்றிக் கேள்விப்பட்டார். தேவரின் தயாரிப்புக்களில் தொடர்ந்து நடித்து வந்த அவர் 'வேட்டைக்காரன்' படத்தில் சாவித்திரியுடன் ஆச்சரியமாக இணைந்து நெருக்கத்துடன் நடித்தார். அந்தக் கட்டிப் புரளல்களைக் கண்டு படப்பிடிப்புத் துறையினரில் ஆச்சரியப் படாதவர்களே இல்லை! அதற்குப் பிறகு வம்பர்கள் வாயடைத்துப் போனார்கள். 'போதுமா? இன்னும் காதல் காட்சிகளில் வேட்டையாடட்டுமா?' என்று அவர்களைப் பார்த்துக் கேட்பது போல இருந்தது அந்த நடிப்பு.

தேவர் பிலிம்ஸ் இன்று சிறந்த படத் தயாரிப்பாளர் களின் வரிசையில் இடம் பெற்றிருப்பதற்கு இருவர் காரணம். ஒருவர் சாண்டோ சின்னப்பா தேவரின் கண் கண்ட தெய்வமாகிய முருகர். இன்னொருவர் கண் கண்ட மனிதராகிய எம். ஜி. ஆர்.

தேவரின் முதல் படமாகிய 'தாய்க்குப் பின் தாரம்' படத்திலிருந்து ஏராளமான படங்களில் எம். ஜி. ஆர். தொடர்ந்து நடித்து தேவரைப் பிரபல படத் தயாரிப்பாளராக் கினார். தேவரின் இறுதி மூச்சு இருந்தவரை எம். ஜி. ஆரின் நல்ல உள்ளத்தினால்தான் தமது நிறுவனம் உயர்ந்தது என்று சொல்லி வந்ததை நான் பல தடவை கேட்டிருக்கிறேன்.

கவிஞர் கண்ணதாசன் தி. மு. க.வை விட்டு விலகி இருந்த சமயம். அப்போது எம். ஜி. ஆர். தி.மு.க.வில் தீவிரப் பற்றுக் கொண்டு முக்கியமானவர்களில் ஒருவராக விளங்கி வந்தார். கண்ணதாசன் சில பத்திரிகைகளிலும், பொது மேடைகளிலும் தி. மு. க. வையும், எம். ஜி. ஆரையும் தாக்கி எழுதியும் பேசியும் வந்தார்.

கவிஞரின் பாடல்களில் எம். ஜி. ஆருக்கு ஈடுபாடு இருந்து வந்தாலும், தம்மையும் தாம் சார்ந்துள்ள கழகத்தையும் தாக்குபவரின் பாடல்கள் தாம் நடிக்கும் படங்களில் இடம் பெறக் கூடாது என்ற முடிவுக்கு வந்தார்.

தேவரின் புதுப் படம் ஒன்றில் எம். ஜி. ஆர். ஒப்பந்தமான போது அதுவரை சின்னப்பா தேவர் எது சொன்னாலும் பெருந்தன்மையோடு மதித்து வந்த மக்கள் திலகம், கண்ணதாசன்

அந்தப் படத்திற்குப் பாடல்கள் எழுதுவதைத் தாம் விரும்பவில்லை என்று தெரிவித்தார். தேவரின் இரண்டு கண்களில் ஒன்று எம். ஜி. ஆர், இன்னொன்று கண்ணதாசன் என்பது படவுலகப் பகிரங்க உண்மை. இப்படி எம். ஜி. ஆர். சொல்லி விட்டாரே என்று சின்னப்பா தேவர் கலங்கி விடவில்லை. பதிலாக கண்ணதாசனைக் கூப்பிட்டு அனுப்பினார்.

''இனி எம். ஜி. ஆரைத் திட்டிப் பேசாதீர்கள்; எழுதாதீர்கள். உங்களுடைய அரசியல் உங்களுடனேயே இருக்கட்டும். அது உங்களைக் காப்பாற்றப் போவது இல்லை. என் பேச்சுக்கு மதிப்பு அளிப்பீர்கள் என்று நம்புகிறேன்'' என்றார்.

கவியரசுக்குச் சில பிடிவாதங்கள் உண்டு. அவற்றின் காரணமாக வாழ்க்கையில் பலவற்றை இழந்திருப்பது உண்டு. ஆனால்—

தேவர் வாக்கு அவருக்குத் தேவ வாக்கு. அதற்குப் பிறகு எம். ஜி. ஆரை எதிர்த்து அவர் எழுதியது இல்லை. பேசியதும் இல்லை.

அரசியல் கொள்கைகளில் அடிக்கடி கண்ணதாசனுக்குக் குழப்பங்கள் உண்டு என்று புரட்சித் தலைவர் நன்கு அறிவார். அவரது பேச்சிலும் எழுத்திலுமுள்ள கொள்கைகள், கருத்துக்கள் தமக்குப் பிடித்தமானவை அல்ல என்ற முடிவுடன் எம். ஜி. ஆர். இருந்து வந்தாலும் அந்த நா நயம், பேனாவின் ஓட்டம்— இவை கவிஞரிடம் ஈடுபாடு கொள்ள வைத்தன. அதை மனதில் கொண்டுதான் தாம் தமிழக முதல்வரானதும் கண்ணதாசனைத் தமிழக ஆஸ்தானக் கவிஞராக்கிப் பெருமைப் படுத்தினார் மாண்புமிகு எம். ஜி. ஆர்.

தகுதியுள்ள ஒருவரைத் தகுதியுள்ள பதவியில் வைக்க எம். ஜி. ஆர். தவறியது இல்லை என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு.

# 6

'குடியிருந்த கோவில்' படத்தில் எம். ஜி. ஆர். நடித்துக் கொண்டிருந்தார். இடம்: சத்யா ஸ்டுடியோ. நடனக் காட்சி. இணைந்து ஆடியவர் எல். விஜயலட்சுமி. படத்தில் பிரபலமான அந்த நடனக் காட்சியை இரண்டு நாட்கள் தொடர்ந்து படமாக்கினார் இயக்குனர் கே. சங்கர்.



சாண்டோ எம். எம். சின்னப்பா தேவருடன்...



தேர்தல் நிதி திரட்டியபோது...

குழந்தைகள் படவிழாவில் கலந்து கொண்டபோது...





தொண்டருக்கு சிகிச்சை.

படப்பிடிப்பைப் பார்க்க யாரையும் அனுமதிக்கவில்லை. படப்பிடிப்பு அறைக்கு வெளியே படத் தயாரிப்பாளர் ஜி. என். வேலுமணி நந்தி போல உட்கார்ந்து கொண்டு, யாராவது எம். ஜி. ஆரைப் பார்க்க வந்தால் சாமர்த்தியமாக 'மடக்கி'த் தனக்கு அருகில் உட்கார வைத்துக் கொள்வார்.

காமராஜர், அறிஞர் அண்ணா, 'சொர்க்க வாசல்' படம், இந்தி நடிகர் ஷம்மி கபூர்—யாரைப் பற்றி, எதைப் பற்றி வேண்டு மானாலும் சுவையாகப் பேசுவார் வேலுமணி.

மீறி வந்தவர்கள் எம். ஜி. ஆரைப் பார்க்க வேண்டுமென்று எழுந்தால் தோளை அமுக்கி உட்கார வைத்து, "டான்ஸ் சீனுங்க. அரை மணியில் முடிந்து விடுங்க. அவரே வெளியே வந்து விடுவாருங்க" என்பார். இப்படி எம். ஜி. ஆரின் 'மூடு' அறிந்து படங்கள் தயாரித்தவர் ஜி. என். வேலுமணி.

அவர் ஆரம்ப காலத்தில் சிவாஜி கணேசனை வைத்துப் படங்கள் தயாரித்துப் பெரு வெற்றி கண்டவர். ஆனால் பிறகு கணேசனுக்கும் வேலுமணிக்கும் சில காரணங்களால் 'விரிசல்கள்' ஏற்படவே, எம். ஜி. ஆரை வைத்துப் படங்கள் தயாரித்தால்தான் இனிப் படவுலகில் நிலைத்து நிற்க முடியும் என்று உணர்ந்தார் வேலுமணி.

அறிஞர் அண்ணா கதை — வசனம் எழுதி உருவான 'சொர்க்க வாசல்' படத்தின்போது புரடக்ஷனில் பணிபுரிந்த வேலுமணியை எம். ஜி. ஆர். நன்கு அறிந்திருந்தார். அதோடு அவர் சிவாஜி கணேசனின் யூனிட்டைச் சேர்ந்தவர் என்பதையும் தெரிந்து வைத்திருந்தார்.

அப்படிப்பட்டவர், இராமாயண விபீஷணனைப் போலத் தன்னிடம் (ராமச்சந்திரனிடம்) வருவதைக் கண்டதும், 'உங்களுக்கு என்னிடம் என்ன வேலை?' என்று எம். ஜி. ஆர். கேட்காமல் முக மலர்ச்சியோடு வரவேற்றார். பலன்—

'குடியிருந்த கோவில்', 'படகோட்டி', 'நான் ஏன் பிறந்தேன்?' — ஆகிய படங்களில் நடித்து, இடுப்பு முறிந்து போயிருந்த வேலுமணியை நிமிர்த்தினார் எம். ஜி. ஆர்.

எதிரிகளிடமிருந்து யார் தம்மிடம் வந்தாலும் அவர்களை அணைப்பார்; ஆதரிப்பார்; வாழ்வு கொடுப்பார் எம். ஜி. ஆர்.

முதல் சான்று வேலுமணி. டி. ஆர். ராமண்ணா, பி. ஆர். பந்துலு, பி. எஸ். வீரப்பா, ஸ்ரீதர் ஆகியவர்களும் அந்த வரிசையில் இடம் பெற்றவர்கள்.

'குடியிருந்த கோவில்' படத்தின் பத்திரிகையாளர் காட்சி அப்பொழுது 'நியூ குளோப்' தியேட்டரில் (இப்போதைய அலங்கார்) நடைபெற்ற போது ஒரு சம்பவம்.

பத்திரிகையாளர்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பி வைத்து அவர்களைக் கவனிக்கும் பொறுப்பை வேலுமணி என்னிடம் ஒப்படைத்து இருந்தார். படத்தைப் பார்க்கப் பல அரசியல் பிரமுகர்களையும் தி. மு. க. எம்.எல்.ஏக்களையும் எம் ஜி. ஆர். பிரத்யேகமாக அழைத்து இருந்தார். அவர்களைக் கவனிக்கும் பொறுப்பை எம். ஜி. ஆரே ஏற்றுக் கொண்டு என்னிடம் வந்து, ''நானும் ஒரு பத்திரிகைக்காரன்தான்! (அப்போது 'நடிகன் குரல்' பத்திரிகையில் பொறுப்பாசிரியராக இருந்தார்.) எனவே நான் அழைத்து இருப்பவர்களை வரவேற்று உட்கார வைக்கும் பொறுப்பை நானே ஏற்றுக் கொள்கிறேன். மற்றவர்களை நீங்கள் கவனியுங்கள்'' என்றார் சிரித்துக் கொண்டே. அப்போது—

'அணுகுண்டு' அய்யாவு என்ற பத்திரிகைக்காரர் என்னிடம் வந்து கோபமாக, ''எனக்கு ஏன் பிரஸ் ஷோவுக்கு டிக்கட் அனுப்பி வைக்கவில்லை?'' என்று வெடித்தார்.

''வேலுமணி கொடுத்த பட்டியல் படி அனுப்பி வைத்து விட்டேன். உங்கள் பெயர் அதில் இல்லை. ஏன் என்று எனக்குத் தெரியாது'' என்றேன்.

''என்னை எப்படியாவது உள்ளே உட்கார வையுங்கள்'' என்று வழியை அடைத்துக் கொண்டு நின்றார் அய்யாவு.

மாடியிலிருந்து இறங்கி வந்த எம். ஜி. ஆர். 'அணுகுண்டு' அய்யாவுவைக் கவனித்து விட்டு, ''இவருக்கு யார் இன்விடேஷன் அனுப்பி வைத்தது?'' என்று படபடப்புடன் என்னைக் கேட்டார்.

நான் பதில் சொல்லுவதற்குள் அங்கே—

# 7

ஒரு பரபரப்பான சம்பவம் நடைபெற்றது. எம். ஜி. ஆர். பாய்ந்து சென்று அணுகுண்டு அய்யாவுவின் கழுத்தில் கையைப் பதித்து, ''போங்கள் வெளியே!'' என்று தள்ளினார்.

பிறகு என்னிடம் அதே விரைவில் திரும்பி வந்து, ''இவர் எல்லாம் ஒரு பத்திரிகை ஆசிரியரா? இவர் நான் நடித்துள்ள

படத்தைப் பார்த்து விமரிசனம் எழுத வந்து விட்டார்! இவருக்குப் போய் அழைப்பிதழ் அனுப்பி ..'' என்று அதே படபடப்பில் சொன்னுர்.

''இவருக்கு இன்விடேஷன் அனுப்பி வைக்கவில்லை. ஏன் அனுப்பவில்லை என்றுதான் என்னைக் கேட்டார்...'' என்று எம். ஜி. ஆரிடம் மெல்லச் சொன்னேன்.

''அப்படியானல் நான் செய்தது சரிதான்!'' என்று சொல்லி விட்டுச் சில எம்.எல்.ஏக்களின் தோளில் கையைச் சுழற்றிப் போட்டுக் கொண்டு மாடிக்குப் போய் விட்டார்.

எம். ஜி. ஆரின் கோபம் பற்றி நான் கேள்விப்பட்டது உண்டு. அன்றுதான் நேரில் கண்டேன்.

அதிகமான படங்களில் எம். ஜி. ஆருக்கு ஜோடியாக நடித்த பெருமை 'கன்னடக் கிளி' என்று அழைக்கப் பெற்ற சரோஜா தேவிக்குச் சொந்தம். 'தங்கமலை ரகசியம்' என்ற தமிழ்ப் படத்தின் வாயிலாக அறிமுகமானவர் அவர். சாண்டோ சின்னப்பா தேவரின் படங்கள் பலவற்றில் எம். ஜி. ஆருடன் நடித்துப் பிரபலமானுர். ஊதியமும் உயர்ந்தது. தேவியும் உயர்ந்தார்.

ஆரம்ப காலத்தில் சில படங்களில் கீச்கீச்சென்று 'கன்னடக் கிளி' என்ற பெயருக்கேற்ப ரசிக்க முடியாத குரலில் பேசிக் கொண்டிருந்த சரோஜா தேவியைப் பக்குவப் படுத்தியவர் எம். ஜி. ஆர்.

குறிப்பிட்ட கதாபாத்திரத்தின் தன்மையைப் புரிந்துகொண்டு எப்படி நடிக்க வேண்டும், எப்படி எல்லாம் மேக்-அப் செய்து கொள்ள வேண்டும், உடையலங்காரம் செய்து கொள்ள வேண்டும் என்று அவருக்குப் படப்பிடிப்புக்கு நடுவே போதித்தவர் புரட்சி நடிகர். 'தர்மம் தலை காக்கும்' படப் பிடிப்பின் போது வாகினி ஸ்டுடியோவில் சில நாட்கள் இந்தப் போதனையைக் கண்டிருக்கிறேன். அந்த உபதேசம்—

சரோஜா தேவியின் நிலையை உயர்த்தியது உண்மை.

இன்று சினிமா நடிகைகளில் கடைசிவரை தன் மதிப்பை இழந்து விடாமல் கல்யாணம் செய்து கொண்டு கண்ணியமாக ஒதுங்கியவர்கள் சிலர். அதில் குறிப்பிடத் தக்கவர்கள் பானுமதி, சரோஜா தேவி, பத்மினி.

புரட்சி நடிகர் புரட்சித் தலைவராக அரசியலில் தீவிரமாகப் புகுந்து தமிழக முதல்வரானதும், சரோஜா தேவி பெங்களூரிலிருந்து டெலிபோனில் தொடர்பு கொண்டு முதல்வர் எம். ஜி. ஆருக்குப் பாராட்டுத் தெரிவித்துக் கொண்டார். அப்போது நான் பெங்களூரில் சரோஜா தேவியின் வீட்டில் அவரைப் பேட்டி கண்டு கொண்டிருந்தேன்.

புரட்சி நடிகரினால் மற்றொரு படத் தயாரிப்பாளர் வாழ்வுபெற்ற வரலாறு குறிப்பிடத் தக்கது. அவர் பி.ஆர். பந்துலு.

தொடக்கத்தில் அவரும், இயக்குனர் ப. நீலகண்டனும் சேர்ந்து 'பத்மினி பிக்சர்ஸ்' ஆரம்பித்து சிவாஜி கணேசனை வைத்துப் படங்கள் தயாரித்து வந்தார்கள். 'முரடன் முத்து' படம் வரையில் பந்துலுவின் பட நிறுவனத்தில் சிவாஜியின் உறவு நிலவி வந்தது.

எம். ஜி. ஆரை வைத்துப் படங்கள் தயாரித்தால்தான் தொடர்ந்து படத் தயாரிப்பாளராக நிலைபெற முடியும் என்ற நிலை அவருக்கும் வந்தது.

தன்னைத் தேடி வருகிறவர் யாராக இருந்தாலும், வந்தவரை விரட்டியடிக்கும் துர்க்குணம் எப்போதும் எம். ஜி. ஆரிடம் இருந்தது இல்லை. எனவே பந்துலுவை வரவேற்று வாழ்வு தர வந்தார். அதற்குத் தூதுவராக அமைந்தவர் சித்ரா கிருஷ்ணசாமி. அந்த 'உயர்ந்த' மனிதரின் உதவி இல்லையென்றால்—

பி. ஆர். பந்துலு — எம். ஜி. ஆர். நல்லுறவு ஏற்பட்டிருக்காது. 'வெள்ளி வெற்றிலைப் பெட்டியே துணை' என்று இருந்து வந்த பந்துலு நல்ல குணச்சித்திர நடிகரே தவிர, சிறந்த இயக்குனரே தவிர—

வெளி உலகம் அவ்வளவாக அறியாதவர். அதை நன்கு அறிந்திருந்த சித்ரா கிருஷ்ணசாமி எம். ஜி. ஆரை பந்துலுவின் படங்களில் நடிக்க 'நல்லுறவு' என்ற முடிச்சைப் போடும் பணியைச் செவ்வனே செய்து முடித்தார். பயன்—

'ஆயிரத்தில் ஒருவன்' படம் தயாராயிற்று. அப்போது கலையுலகில் எம். ஜி. ஆர். ஆயிரத்தில் ஒருவர் என்று பந்துலு படக்குழுவைச் சேர்ந்தவர்கள் தெரிந்து கொண்டார்கள். அதற்காகப் பத்திரிகையாளர்களை அழைத்துச் சந்திப்பு ஒன்று நடத்தினார் பந்துலு.

படம் பிரமாதமாக அமைய எம். ஜி. ஆர். எப்படி எல்லாம் உதவினுர் என்று நெஞ்சம் நெகிழப் பல நிகழ்ச்சிகளை எடுத்துரைத்தார் அவர்.

சிவாஜியைப் பிரதம பாகத்தில் வைத்து 'கர்ணன்', 'கப்பலோட்டிய தமிழன்' போன்ற படங்களைத் தயாரித்துப் பெற்ற பெருமைகளைக் காட்டிலும் 'ஆயிரத்தில் ஒருவன்' படப்பிடிப்பின் போது கண்ட எம். ஜி. ஆரின் சிறப்புக்களை அவர் நன்றிப் பெருக்கோடு சொன்னது, படத் தயாரிப்பாளர்கள் வேறு யாரும் இதுவரை சொல்லாததாக இருந்தது.

''இவ்வளவு திறமைகள் மிகுந்த கலைஞரை நான் கண்டதே இல்லை!'' என்று மகிழ்ச்சிக் கண்ணீரை வழிய விட்டுக்கொண்டே பேசினுர் பந்துலு.

படவுலகில் போலிக் கண்ணீரும் நீலிக் கண்ணீரும்தான் நான் கண்டிருப்பவை. பந்துலுவின் கண்ணீர்—

வரலாறு படைத்து விட்ட வற்றுத, வாஞ்சைக் கண்ணீர்.

# 8

'கல்கண்டு' ஆசிரியர் அமரர் தமிழ்வாணனிடம் எம். ஜி ஆருக்கு நல்ல ஈடுபாடு இருந்தது உண்டு. அவரது அட்டகாசமான இடிச் சிரிப்பு, எழுச்சி கொண்ட எழுத்து, தன் பெயரைத் 'தமிழ்வாணன்' என்று வைத்துக் கொண்ட சிறப்பு இவை எல்லாம் தமிழ்வாணனிடம் நட்பை வளர்த்துக் கொள்ளக் காரணங்கள். கேள்வி-பதில், சிறப்புக் கட்டுரை, துணுக்குகள் எல்லாவற்றிலும் தமிழ்வாணன் எம். ஜி. ஆரின் சிறப்பியல்புகளைச் சமயம் வரும் போது எல்லாம் எழுதுவார். எங்கேயாவது தமிழ்வாணனைக் கண்டால் இறுக அணைத்துக் கொண்டு, ''என்னைப் பற்றி எழுதியதைப் படித்தேன். வேறு சிலரும் உங்கள் பத்திரிகையிலிருந்து அந்தப் பகுதிகளை வெட்டி எடுத்து எனக்கு அனுப்பி வைத்திருந்தார்கள்'' என்று சொல்லுவார். இந்த நல்லுறவும் நட்பும் இறுகி விட்டதன் காரணமாக தமிழ்வாணன் எம். ஜி. ஆரை அடிக்கடி சந்திப்பது உண்டு.

அதிகமாக முறுக்கப்பட்ட கயிறு அறுந்து போவது போல தமிழ்வாணன் திடீரென்று 'கல்கண்டு' பத்திரிகையில் எம். ஜி ஆரைத் தாக்கி எழுதினுர். எம். ஜி. ஆரின் ரசிகர்கள்

வேதனையோடு அவற்றைப் படித்து, 'ஏன்? ஏன்?' என்று வினவை எழுப்பினார்கள். விரோதிகள் விரும்பி வாசித்தார்கள்.

இதற்கு விடை ஜப்பானில் ஒலிம்பிக் விளையாட்டு விழா நடைபெற்ற போது கிடைத்தது. அந்த விழா சமயத்தில் எம். ஜி. ஆர். 'உலகம் சுற்றும் வாலிபன்' படப்பிடிப்புக்காக ஜப்பானுக்குத் தமது குழுவினருடன் சென்றிருந்தார். அங்கு தமிழ்வாணனைக் கண்டதும் எம். ஜி. ஆருக்குப் பொறுக்கவில்லை.

பெரிய அளவில் எம். ஜி. ஆரும் தமிழ்வாணனும் கண்ணிய மான முறையில் வாய்ச் சண்டை போட்டுக் கொண்டார்கள். "என் படத்தைப் பற்றி, என் நடிப்பைப் பற்றி என்ன வேண்டு மானாலும் கண்டித்தோ பாராட்டியோ எழுதுங்கள். அது ஆசிரியராகிய உங்கள் உரிமை. ஆனால் என் சாதியைப் பற்றி, சில தனிப்பட்ட விஷயங்களைப் பற்றி எப்படி நீங்கள் எழுதலாம்? ஒரு நடிகன் எந்த சாதியாக இருந்தால்தான் என்ன? சாதியை வைத்தா அவன் கலைத் தொண்டுக்குப் புகழ்?" இப்படிப் பொரிந்து தள்ளி விட்டார் புரட்சி நடிகர்.

தமிழ்வாணன் சொன்ன சமாதானங்கள் எதையும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் எம். ஜி. ஆர். இல்லை. சாதியைப் பற்றி யார் குறிப்பிட்டுப் பேசினாலும் எழுதினாலும் எம். ஜி. ஆர். எரிமலையாகி விடுவார்.

"தினத்தந்தி"யில் கூடச் சில காலம் அமரர் சி. பா. ஆதித்தனாரின் ஆதிக்கத்தில் எம். ஜி. ஆரைத் தாக்கி எழுதி வந்தார்கள். அவரை 'மலையாளி' என்று குறிப்பிட்டார்கள். அப்போதெல்லாம் "தினத்தந்தி"யைக் கடுமையாக விமரிசித்தார் எம். ஜி. ஆர். தம் தொடர்புள்ள சினிமா விளம்பரங்கள், புகைப்படங்கள், செய்திகள் எதுவும் 'தினத்தந்தி' பத்திரிகைக்குக் கொடுக்கக் கூடாது என்பதில் தீவிரமாக இருந்தார். நாளடைவில் "தினத்தந்தி"யில் எம். ஜி. ஆர். எதிர்ப்புக் கொள்கையை அவர்கள் கைவிட்டார்கள்.

நல்லிதய நண்பர்களாகப் பழகி வந்த எம். ஜி. ஆர்—தமிழ்வாணனுக்குள் ஏன் மோதல் என்பதற்குரிய காரணம் எனக்குப் பிறகு ஒரு சமயம் தெரிய வந்தது.

எம். ஜி. ஆரிடம் நான் பேசிக் கொண்டு இருந்தபோது அவரது மனநிலை பார்த்து அது பற்றி மெல்லக் கிளறினேன். ஏதோ ஒரு விளம்பரத்தில் எம். ஜி. ஆரின் புகைப்படத்தைப் போட்டுக் கொள்ள தமிழ்வாணன் விரும்பியதாகவும், அதைத்



கவிஞர் கண்ணதாசனுடன்

எம். ஜி. ஆர்—ஜெயலலிதா





இதயவீணை படப்பிடிப்புக்காக காஷ்மீர் சென்றிருந்தபோது...

தான் விரும்பவில்லை என்றும் எம். ஜி. ஆர். சொன்னர். அதற்குப் பிறகுதான் திடீர்த் தாக்குதலை தமிழ்வாணன் தொடங்கினர் என்றும் தெரிவித்தார். ஆனாலும் தமிழ்வாணனின் பேனவின் ஆற்றலை, அவரது மொழிப் பற்றை, ஒரு பத்திரிகையாசிரியர் பஞ்சமில்லாமல் வாழ்ந்து காட்டிய சிறப்பை எம். ஜி. ஆர் சந்தர்ப்பம் வரும் போது எல்லாம் சொல்லிக் கொண்டே இருந்தார்.

கலைவாணரிடம் எம். ஜி. ஆருக்கு இருந்து வந்த மரியாதை, பக்தி கொஞ்சமல்ல. டி. கே. எஸ். நாடகக் குழுவில் நகைச்சுவைப் பாத்திரங்கள் ஏற்று நடித்து வந்த காலத்திலேயே காலமறிந்து சில வசனங்களைப் பேசி, நாடகம் பார்ப்போரிடம் சிந்தனையை உண்டாக்கி விட்டதைப் பற்றிச் சொல்லி, "நாடகங்களில் நற்கருத்துக்களைப் புகுத்திக் கலைவாணர் செய்து வரும் சேவை நாட்டுக்குச் செய்து வரும் பெரும் சேவை" என்று என்னிடம் உணர்ச்சி பொங்கக் கூறியிருக்கிறர். நாளடைவில் கலைவாணர் பெரும் புகழ் பெற்று தி. மு. க.வில் ஈடுபாடு கொண்டு, அண்ணவின் கொள்கைகளை இடம் பார்த்துப் படங்களில் புகுத்தியபோது எல்லாம் புரட்சி நடிகரின் உள்ளம் உற்சாகக் கொந்தளிப்பு அடைந்தது. தாம் நடித்து வந்த படங்களில் கலைவாணரின் குழு விரும்பி இடம் பெறத் தூண்டுகோலானர். எம். ஜி. ஆர். கதாநாயகராக நடித்துக் கொண்டே சில கருத்துக்களை எடுத்துச் சொல்லி அப்படியே நடந்து காட்டுவார். இன்னெரு பக்கம் கலைவாணர் நகைச் சுவையோடு பிரசார வித்துக்களை மக்கள் மனத்தில் விதைப்பார். இவ்வாறு புரட்சி நடிகரும் கலைவாணரும் இரட்டைக் குழல் பிரசார பீரங்கிகளாகச் செயல்பட்டு வந்தார்கள்.

கலைவாணர் புகழை மட்டுமே செல்வமாகக் கொண்டு வாழ்க்கையில் தொல்லைகளை அனுபவித்து வந்த காலத்தில் ஓடி வந்து உதவிய வள்ளலாக விளங்கியவர் 'பொன்மனச் செம்மல்.'

'ஆதிமூலமே!' என்று முதலை வாய்ப்பட்ட யானை அலறியபோது அதனை விடுவிக்க விஷ்ணுக் கடவுள் விரைந்தோடி வந்தது புராணக் கதை.

அது கதை. நான் சொல்வது கண் கண்ட காட்சி. "ராமச்சந்திரா!" என்று நாற்காலியில் சாய்ந்து கொண்டே என். எஸ். கிருஷ்ணன் ஒரு தாபக் குரல் எழுப்பினல் போதும்.

எங்கிருந்தாலும் (எம். ஜி.) ராமச்சந்திரன் ஓடோடி வந்து உதவிய நாட்கள் கலையுலக வரலாற்றில் இடம் பெற்றிருக்கும் அழியாத அத்தியாயம்.

# 9

கலைவாணரின் காலத்திற்குப் பிறகும் எம். ஜி. ஆர் அவரது குடும்பத்திற்குச் செய்த உதவிகள் ஏராளம். மதுரம் ஏதாவது பிரச்னைகளைச் சுமந்து கொண்டு வந்தால் அதற்கு உடனே பரிகாரம் தேடி விடுவார். எப்படிப்பட்ட சூழ்நிலையில் எம். ஜி. ஆர். இருந்து வந்தாலும் கலைவாணரின் குடும்பத்திற்குக் கஷ்டம் என்றால் அவருடைய பொன்னுள்ளம் பொறுக்காது; அள்ளி வழங்கி விடுவார்.

ஒரு சமயம் கலைவாணர் விழா தியாகராயநகர் வாணி மகாலில் நடைபெற்ற பொழுது எம். ஜி. ஆர். எழுச்சியோடு என். எஸ். கிருஷ்ணனின் கலைத் தொண்டுகளைப் பற்றிப் பேசினார். பெரும் புகழ் பெற்றுக் கோடிக் கணக்கான மக்களை நகைச்சுவையினால் மகிழ்வித்து வந்த கலைவாணர் அகால மரணம் அடைந்து விட்டதற்கு மதுபானப் பழக்கமும் ஒரு காரணம் என்றார். குடி அவரது குடியைக் கெடுத்து விட்டது என்று வேதனையோடு குறிப்பிட்டார்.

''அதேபோல கலைவாணரின் மகன் கோலப்பனையும் அந்தக் குடிப் பழக்கம் பற்றிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இள வயதில் கோலப்பன் அந்தக் கொடிய பழக்கத்திற்கு அடிமையானது வருந்தத் தக்கது'' என்று மிக உருக்கமாகப் பேசினார் எம். ஜி. ஆர்.

எங்கோ ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்த கலைவாணரின் மகன் கோலப்பன் மேடையை நோக்கி ஓடி வந்தார். புரட்சி நடிகரின் கால்களில் வெட்டுண்ட மரம் போல் விழுந்தார். ''இனி நான் குடிக்க மாட்டேன். உங்கள் சொல்படிக் கேட்டு நடப்பேன். கலை உலகில் நான் சிறப்புடன் பணியாற்ற நீங்கள்தான் எனக்கு வழி காட்ட வேண்டும்'' என்று கண்ணீரைக் கொட்டிக் கொண்டே கூறினார்.

கோலப்பனின் உருக்கமான வேண்டுகோளும் விம்மலும் குளமான கண்களும் அங்கு இருந்தோரை மெய் சிலிர்க்கச் செய்தன.

''கலைவாணரின் ஒரு வாரிசு உருப்பட்டு விட்டது. வருங் காலத்திற்கு கிருஷ்ணனின் பெயரைக் குறிப்பிட கோலப்பன் புது வாழ்வு பெற்று விட்டார்' என்று எம்.ஜி.ஆர். நம்பினுர்.

பொலிவுற்ற முகத்தோடு கோலப்பனைத் தூக்கினுர்; நிமிர்த்தினுர்; கண்ணீரைத் துடைத்தார். தமது கைகளினுல் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து, ''உன்னுடைய புதிய முடிவை நான் வரவேற்கிறேன்'' என்ருர்.

ஆனுல் கோலப்பன் தன்னுடைய புது தீர்மானத்தின்படி மறுவாழ்வு பெறவில்லை. தொடர்ந்து குடித்துத் தன் வாழ்வைக் கெடுத்துக் கொண்டார் என்பதைச் சில நாட்களுக்குப் பிறகு எம்.ஜி.ஆர். அறிந்து மிக வருந்தினுர்.

மதுரத்தின் இறுதி மூச்சு இருந்த வரை கலைவாணரின் குடும்பத்திற்கு எம்.ஜி.ஆர். செய்து வந்த உதவிகள் கணக்கி லடங்காது.

நடேசன் ஒரு சாதாரணமான தையல் தொழிலாளி தான். அந்தக் காலத்தில் நியூட்டோன் ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்ட படங்களுக்கு 'காஸ்டியூம்' தயாரித்துத் தந்து பலருடைய தோழமையைத் தேடிக் கொண்டவர். எம். ஜி. ஆரிடம் அவருக்குத் தனி ஈடுபாடுண்டு. 'அன்பு', 'ஆசை' போன்ற படங்களைத் தயாரித்த நடேசன் எம். ஜி. ஆரைக் கதாநாயகனுக வைத்து ஒரு படம் தயாரிக்க ஆர்வம் கொண்டார். பெரும் புகழ் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த புரட்சி நடிகரை வைத்து ஒரு படம் தயாரிக்க வேண்டுமானுல் கணிசமாக மூலதனம் வேண்டும். அவருக்கேற்ற நட்சத்திர நடிகையை இணையாகப் போட வேண்டும். கருத்துள்ள கதை, நாட்டுக்குத் தேவையான பிரசாரங்களைப் புகுத்துவதற்குரிய காட்சிகள் இருந்தாக வேண்டும்.

நடேசன் அதற்குரிய வசதிகள் கொண்டவர்தானு என்று எல்லாம் புரட்சி நடிகர் யோசிக்கவில்லை. அவரது படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டார். நடேசனே படத்தை இயக்கப் போகிருர் என்று அறிந்தபோது கூட எம். ஜி. ஆர். அதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. ஏனெனில் அந்தத் தகுதியையும்

நடேசன் பெற்றிருந்தால் அது வரவேற்கத் தக்கது என்பது அவரது பரந்த உள்ளமாக இருந்தது.

'மன்னுதி மன்னன்' என்பது நடேசன் தயாரித்த அந்தப் படத்தின் பெயர். அதில் எம். ஜி. ஆருக்கு இணையாக பத்மினி நடித்தார். ஏராளமான பணச் செலவில் பிரும்மாண்டமான செட்டுகள் அமைத்து, படங்களை உருவாக்குகிறவர்களுக்கு எப்படிப்பட்ட ஒத்துழைப்பை எம். ஜி. ஆர். தருவாரோ அதை விட ஒரு பங்கு அதிகமாகவே நடேசனின் படத்திற்கு அவர் தந்து நடித்து உதவினுர் என்பதை நான் அறிவேன்.

'மன்னுதி மன்ன'னில் எம். ஜி. ஆரும், பத்மினியும் இணைந்து சுழன்ருடும் நடனக் காட்சி ஒன்று வருகிறது. முறைப்படி நடனம் கற்றுக்கொண்டு ஆடற்கலையில் வல்லவரான பத்மினி அந்தப் படத்தில் அழகு நாட்டியம் ஆடியது அதிசயமல்ல. அவருக்கு இணையாக எம். ஜி. ஆர். நடனப் பயிற்சி பெற்று ஆடியதுதான் அதிசயம்!

அந்தக் காட்சி படமாக்கப் பெற்ற பொழுது அங்கிருந்த அனைவரும் எம். ஜி. ஆர். ஆடிய நடனச் சிறப்பைக் கண்டு பிரமித்துப் போனுர்கள்!

# 10

"யார் சிறந்த நடிகர், எம். ஜி. ஆரா, சிவாஜி கணேசனு?" என்று 'குமுதம்' பத்திரிகை வாசகர்களுக்கு ஒரு போட்டி வைத்தது. அப்பொழுது 'குமுதம்' மாதம் மும்முறை ஏட்டில் பணி புரிந்து வந்த என்னிடம் ஆசிரியர் எஸ். ஏ. பி. எம். ஜி. ஆரின் புகைப்படம் ஒன்று சோஷியல் போஸில் தேவை என்று கேட்டார்.

அப்பொழுது எம் ஜி. ஆர். சமூகப் படங்களில் அவ்வளவாக நடிக்கவில்லை. பெரும்பாலான படங்களில் அவருடைய ஸ்டில்ஸ் அரசர், போர் வீரருக்குரிய உடை அலங்காரங்களுடனேயே காணப்பெற்றன. எனவே எம். ஜி. ஆரிடம் நேரில் அவரது சொந்தப் புகைப்படம் ஒன்றைக் கேட்டு வாங்கி விடலாம் என அவரைப் பார்க்கச் சென்றேன்.

லாயிட்ஸ் ரோடு; அதே பெயரால் ஒரு சந்து; அதில் ஒரு வீடு; அங்கிருந்தார் எம். ஜி. ஆர். நான் சென்றிருந்த நேரத்தில் தேகப் பயிற்சி செய்து கொண்டிருந்தார். வியர்வை வெள்ளத்திற்கு நடுவே தலையை அசைத்து என்னை உட்காரச் சொன்னார்.

ஆயிற்று அரை மணி நேரம். குளித்துவிட்டு, வெண்ணுடைகள் அணிந்து, முழங்கை வரை சட்டையை மடித்து விட்டுக் கொண்டு, கைக்குட்டையைச் சட்டைக் காலருக்கு அடியில் திணித்து வைத்துக் கொண்டு வந்தார். சிரித்த முகத்தோடு, ''நலமா?'' என்று கேட்டார்.

''நலம்'' என்று பதில் சொன்னேன். வந்த விஷயத்தைக் கூறினேன்.

'' 'குமுதம்' பத்திரிகையில் என் புகைப்படம் வருவதாவது? அந்தப் பத்திரிகையில் தொடர்ந்து நான் நடித்துள்ள படங்களைத் தாக்கி விமரிசனம் எழுதி வருகிறார்கள். படங்களுக்கு விமரிசனம் எழுதாமல் என்னைத் தாக்கி எழுதுவதே அவர்களுக்குக் கைவந்த கலையாகி விட்டது. அந்தப் பத்திரிகையில் என் புகைப்படம் வெளிவருவதை நான் விரும்பவில்லை. அதோடு அதில் அறிவிக்கவிருக்கும் போட்டியினால் கணேசனுக்கும் எனக்கும் விரோதம் வளரும். ஆகவே போட்டி அறிவிப்பை நான் எதிர்க்கிறேன்.''

இப்படி எம். ஜி. ஆர். காரசாரமாகப் பேசினார். என்னை வரவேற்று உட்காரச் சொன்னபோது முகத்தில் பொலிந்திருந்த புன்னகை போனவிடம் தெரியவில்லை! பதிலாகக் கடுகடுப்பு மேகங்கள் கப்பிக் கொண்டிருந்தன. 'ஏன் எம். ஜி. ஆரைப் புகைப்படம் கேட்டோம்?' என்றாகி விட்டது என் நிலை.

வழக்கம் போல எழுந்து நின்று இரு கைகளையும் பொன் தாமரை மொட்டுப் போலக் கூப்பி வணங்கி வழியனுப்பிக் கொண்டே, ''என்னுடைய கடுமையான கண்டனம் உங்களுக்கல்ல; 'குமுத'த்திற்கு. ஆசிரியரிடம் தெரிவியுங்கள்'' என்றார்.

ஆசிரியர் எஸ். ஏ. பி. நான் சொன்னதை அமைதியோடு கேட்டுக் கொண்டார். உலகப் புரட்சியே ஏற்பட்டாலும் அவரது பொறுமையில் புரட்சி உண்டாகாது. எந்த விளைவைக் கண்டும் விருப்பு, வெறுப்புக் கொள்ளாமல் ஆச்சரியமான அமைதி கொண்ட அதிசயப் பத்திரிகை ஆசிரியர் அவர்.

எனக்குத் தெரிந்து அப்படிப்பட்டவர்கள் இருவர். பத்திரிகை உலகில் எஸ். ஏ. பி. சினிமா உலகில் இயக்குனர் டி. ஆர். ராமண்ணா.

அதே பொறுமையின் உருவமாக எஸ். ஏ. பி. என்னிடம் கேட்டார். "எம். ஜி. ஆரின் புகைப்படம் உங்களிடம் இருக்கிறதா என்றுதானே கேட்டேன்? நீங்கள் ஏன் எம். ஜி. ஆரிடம் புகைப்படம் கேட்டீர்கள்? நடத்தப் போகிற போட்டி அறிவிப்புப் பற்றியெல்லாம் அவரிடம் ஏன் சொன்னீர்கள்?"

நான் சிறிது திணறி விட்டு, "எம். ஜி. ஆரின் புகைப்படம் அவரைத் தவிர வேறு யாரிடமும் கிடைக்காது. அவருக்கு மிகவும் பிடித்த ஸ்டில் போட்டோகிராபர் நாகராஜராவிடம் பிரிண்ட் போடச் சொல்லிப் பெற்றுத் தருவார். அதனால்தான் அவரிடம் கேட்க நேர்ந்தது" என்றேன்.

ஒரு புகைப்படம் கேட்கப் போனதின் விளைவு? 'குமுதம்' ஆசிரியர் வெளியே தெரியாமல் என்னிடம் வருத்தப்பட்டுக் கொண்டார். எம். ஜி, ஆர். எஸ். ஏ. பிக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதிக் குமுறினார். 'குமுத'த்தில் அந்தப் போட்டி அறிவிப்பு வரக் கூடாது என்றும், தன் புகைப்படத்தை வெளியிடக் கூடாது என்றும் கண்டனம் தெரிவித்தார். அதே கடிதத்தின் நகலை 'நடிகன் குரல்' பத்திரிகையிலும் வெளியிட்டு விட்டார்.

அடுத்த விளைவு? 'குமுதம்' பத்திரிகையிலிருந்து என் தொடர்பு அறுந்தது.

என்னுடைய எழுத்தாற்றலையும் சினிமா உலக அனுபவங்களையும் நன்கு அறிந்திருந்த 'குமுதம்' பிரசுரகர்த்தர் பார்த்தசாரதி என்னை இழக்க விரும்பாமல் தவித்தார். ஆசிரியரிடம் அதற்காகத் தூது போனார். வழக்கறிஞரான அவர் அவ்வளவாக நீதி மன்றங்களுக்குப் போவதில்லை என்றாலும், என்னுடைய பேனா சேவை 'குமுத'த்தில் தொடர வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு எனக்காக வாதாடினார்.

எஸ். ஏ. பி. அவரிடம் சொல்லி அனுப்பியது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. "தங்க ஊசி என்பதற்காக அதைக் கண்ணில் குத்திக் கொள்வதில்லை."

இந்த விளைவுகளை நான் எம். ஜி. ஆரிடம் சொல்லா விட்டாலும் அவர் எப்படியோ தெரிந்து கொண்டார்.

சினிமாவுக்காக ஒரே தமிழ் தினப் பத்திரிகையாக நடத்தப் பெற்ற 'தென்றல் திரை'யில் அதற்குப் பின்

ஆசிரியரான எனக்கு, அதன் உரிமையாளர் கே. ஆர். பாலனும். நண்பர் தமிழ்வாணனும் இணைந்து ஒரு விழா எடுத்தார்கள். பத்திரிகை உலகில் இருபத்தைந்து ஆண்டுகள் நான் பணி புரிந்ததற்காக நடைபெற்ற அந்த விழாவில் எம். ஜி. ஆர். பெருந்தன்மையோடு கலந்து கொண்டார். வெளியூர் படப் பிடிப்பில் இருந்த அவர் எனக்காக காரில் புறப்பட்டுக் குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேர்ந்தார்.

விழா நடைபெற்ற வாணி மகாலில் எம். ஜி. ஆர். நுழைந்த போது—.

ஏராளமான ரசிகர்கள் எம். ஜி. ஆரைச் சுற்றிக் கொண்டார்கள். கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரத்தைப் பற்றிக் குலுக்கியவர்களும்—

கையெழுத்து நோட்டைப் பிரித்து அவரது கையெழுத்தைப் பெறக் குவிந்தவர்களும்—

'வாழ்க!' ஒலி எழுப்பியவர்களும் ஏராளம்; ஏராளம். வாணி மகாலின் வாசலில் போக்குவரத்து தேங்கி விட்டது.

அவர்களிடமிருந்து மீண்டு மேடைக்கு எம். ஜி. ஆர். வரப் பதினைந்து நிமிடங்களுக்கு மேலாயிற்று.

விழாத் தலைவர் சாண்டில்யன் அருகிலிருந்த என்னிடம், "அதுதான் எம். ஜி. ஆருக்குப் பெருமை. தன் ரசிகர்களைத் தள்ளிக் கொண்டு அவர் வருவது இல்லை. அந்த உள்ளம்தான் அவரைப் புகழின் உச்சியில் ஏற்றி வைத்திருக்கிறது" என்றார்.

விழாத் தொடங்குவதற்கு முன்னால் சாண்டில்யனை வணங்கினார் எம். ஜி. ஆர்.

"பார்த்து ரொம்ப நாளாச்சு!" என்று எம். ஜி. ஆர். சொல்லி விட்டு, "உங்களுடைய சரித்திரக் கதைகள் ஏதாவது ஒன்றில் நடிக்க எனக்கு நீண்ட கால ஆசை. ஆனால் படம் தயாரிப்பவர்கள் சரித்திர கால 'காஸ்ட்யூம்' தேடுவதற்குள் நிறையப் பணம் செலவிடப் பணத்தைத் தேடிக் கொள்ள வேண்டும்!" என்றார்.

தொடர்ந்தார்: "வேறு சமூக நாவல் ஏதேனும் இருந்தால் கொடுங்களேன், நான் நடிக்கிறேன்."

"'மதுமலர்' என்ற கதை இருக்கிறது" என்றார் சாண்டில்யன்.

"அப்படியா? கவனிக்கிறேன்" என்றார் எம். ஜி. ஆர்.

விழாவில் சுமார் முக்கால் மணி நேரம் பத்திரிகைக்காரர்களுக்கும் சினிமாக் கலைஞர்களுக்கும் எப்படிப்பட்ட தொடர்பு இருக்க வேண்டும் என்று சிறந்த கருத்துக்களை எடுத்துரைத்தார் புரட்சி நடிகர். என் பெயரைச் சொல்லி. "எழுதுங்கள். எழுதிக் கொண்டே இருங்கள். யாருடைய மனமும் காயப்படாமல் நாசூக்காகக் குத்துங்கள்!" என்று கூறினர்.

சாண்டில்யனின் 'மதுமலர்' நாவலைப் படத் தயாரிப்பாளர் வேலுமணி எம். ஜி. ஆரின் அபிப்பிராயப்படி விலைக்கு வாங்கினர். அதைப் படமாக்குவதற்குரிய ஏற்பாடுகள் பரபரப்பாக நடைபெற்றன. ஆனல்—

படமாகவில்லை! காரணம் அது மூன்று தலைமுறைக் கதை. மூன்று பாத்திரங்களில் எம். ஜி. ஆர். நடிக்க வேண்டியதாயிருந்தாலும் முதியவர் வேடம்தான் முதல் இடம் பெற்றிருந்தது. அதை விரும்பவில்லை வேலுமணி. எனவே படமாக்குகிற யோசனை கைவிடப்பட்டது என்று அவர் என்னிடம் தெரிவித்தார். அதற்காக சாண்டில்யனுக்கு அவர் முன் பணமாகத் தந்திருந்தது ரூபாய் இரண்டாயிரம்தான். இதேபோல இன்னும் சில தமிழ் எழுத்தாளர்களின் கதைகளையும் அவர் விலைக்கு வாங்கிப் போட்டுப் படமாக்காமலேயே இருந்து விட்டார்.

சில திடீர் முடிவுகளினுல் சில தமிழ் எழுத்தாளர்களுக்கு வேலுமணி கொடுத்து இருக்கும் பணம் பல ஆயிரங்கள் இருக்கும். அதில் 'குமுதம்' ரங்கராஜனின் 'இது சத்தியம்' மட்டும்தான் தமிழ்ப் படமாக வெளிவந்தது.

# 11

'பணம் படைத்தவன்' என்று ஒரு படம்; டி. ஆர். ராமண்ணு தயாரித்து இயக்கியது. அதில் எம். ஜி. ஆர். ஹீரோ. இரண்டு கதாநாயகிகள். ஒருவர் கே. ஆர். விஜயா, இன்னெருவர் சௌகார் ஜானகி.

எம். ஜி. ஆரைத் தன்னுடைய மேனுட்டு நடனங்களினுலும் பணக்காரத்தனத்தினுலும் மயக்கித் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிற கதாபாத்திரம் சௌகார் ஜானகியினுடையது.

அதற்குரிய சில முக்கியமான காட்சிகளை கல்கத்தாவில் நைட் கிளப்பில் படமாக்க முடிவு செய்திருந்தார் ராமண்ணு.



ஒரு திருமண வரவேற்பில் துணைவியாருடன்.



தாய்க்குலத்தின் பாராட்டு

பயணம் புறப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன் அதில் ஒரு சிக்கல் முளைத்தது.

சௌகார் ஜானகிக்குப் பதிலாக அந்தக் கதாபாத்திரத்திற்கு வேறு யாராவது போடலாம் என்று எம். ஜி. ஆர். கருதுவதாக அவரது பெயரால் ஒரு செய்தி டி. ஆர். ராமண்ணாவின் காதில் விழுந்தது.

தன் ஏற்பாடுகளில் எதிலும் எம். ஜி. ஆர். குறுக்கிடுவதில்லை என்பதை ராமண்ணா நன்கு அறிவார். அப்படி இருக்க எப்படி அந்தச் செய்தி கிளம்பிற்று என்று சற்று சஞ்சலப்பட்டார் அவர்.

ராமண்ணாவை நான் நன்கு அறிவேன். மலையே சரிந்தாலும் நிலை கலங்காதவர். அவரது சதா சிரித்த முகத்தில் காணப்பட்ட துயரச் சாயலைப் புரிந்து கொண்டு மெல்லக் காரணம் கேட்டேன். சொன்னார். "எம். ஜி. ஆர். அப்படிச் சொல்லி இருக்க மாட்டார்" என்றேன்.

"என் அபிப்பிராயமும் அதுவே தான். ஆனாலும் ஏன் பேச்சு வருகிறது?"

ஆர். ஆர். பிக்சர்ஸில் பி. ஆர். ஓ.வாகப் பணிபுரிந்து வந்த நான் அது பற்றி எம். ஜி. ஆரிடம் பேசிப் பார்த்தால் என்ன என்று எனக்குள் முடிவு செய்து கொண்டேன். அதை ராம்ண்ணாவிடம் நான் சொல்லவில்லை. சொன்னால், "வேண்டாம், நேரடியாகச் செய்தி வராத வரை அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது இல்லை" என்று சொல்லி விடுவார் அவர். எனவே —

நானாகவே எம். ஜி. ஆரிடம் அதைப் பற்றிப் பேசத் தீர்மானித்துக் கொண்டேன்.

வாகினியில் தேவர் படத்தில் எம். ஜி. ஆர். ஒரு ஸ்டண்ட் காட்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

சாண்டோ சின்னப்பா தேவர் பட முதலாளி; முருக பக்தர்; நல்லவர். அதையெல்லாம் கூட நினைத்துப் பார்க்காமல் 'படத் திற்காக' அவருடன் ஒரு சண்டைக் காட்சியில் மோதிக் கொண்டி ருந்தார் எம். ஜி. ஆர். ஒத்திகைக்கு முன் 'முருகா' என்று கூவிக் கொண்டே அவரும் எம். ஜி. ஆரின் குத்துக்களை வஞ்சனை யில்லாமல் வாங்கிக் கட்டிக் கொண்டார்.

அந்த சண்டைக் காட்சி முடிந்து, வேர்வை வெள்ளத்துக்கு நடுவே நீந்திக் கொண்டு, உடம்பைத் துடைத்துக் கொண்டு

எம். ஜி. ஆர். வந்து ஓர் ஓரமாக நாற்காலியில் உட்காரும் வரை காத்து இருந்தேன்.

''ஓ, எப்ப வந்தீங்க?'' என்ருர் எம். ஜி. ஆர்.

''அரை மணி ஆயிற்று'' என்ற உண்மையை விழுங்கி விட்டு, ''இப்பத்தான்'' என்று சொல்லி வைத்தேன்.

அது நியாயமானது என்று நினைத்தேன். பணம் கொடுக்கிற படத் தயாரிப்பாளர், நல்ல மனிதர், தேவர். அவர் ஏற்றுக் கொண்ட வில்லனின் கையாள் என்கிற கதாபாத்திரத்திற்குத் தண்டனையாக எம். ஜி. ஆரிடம் 'குத்து' வாங்கிக் கொள்கிற சினிமாக் கொடுமையை முப்பது நிமிடங்களாக நான் பார்த்து இருந்ததை ஏன் எம். ஜி. ஆர். அறிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றவே 'கோயபல்ஸ்' ஆனேன்!

அடுத்த காட்சியைப் படமாக்குவதற்குள் வந்த விஷயத்தை, அதாவது சௌகார் ஜானகி சிக்கலை மெல்லச் சொன்னேன்.

''இது என்ன புரளி?'' என்று கேட்டார். ''இது என்ன வம்பு?'' என்ருர் தொடர்ந்து. ''என்னை வைத்துப் படங்கள் தயாரிப்பவர் களை 'முதலாளி' என்று நான் அழைப்பது வழக்கம். அப்படிப்பட்ட முதலாளிகளில் ராமண்ணாவும் ஒருவர். அவர் தயாரிக்கும் படங்களில் யார் யாரை நடிகர், நடிகர்களாகப் போடுவது என்பது அவரது கருத்து. இதில் என் கருத்துக்கு ஏது இடம்? சில சமயங் களில் வேலையில்லாமல் இருக்கும் சில டெக்னீஷியன்களுக்கு வேலை தரலாமே என்று சொல்லி வைப்பேன். அது கூடக் கட்டாயமாகக் கூறுவது இல்லை. ஆனல் சௌகார் ஜானகி படத் தில் இருக்கட்டும் என்ருே, வேண்டாம் என்ருே நான் சொன்னது இல்லை!''

அவரது பேச்சில் நேர்மையும் நியாயமும் தெரிந்தன. எனக்குத் தெரிந்த சில காமெராமேன்களுக்கும், சண்டைக் காட்சி களில் வருவோருக்கும் சந்தர்ப்பம் தருமாறு சிபாரிசு செய்திருக் கிருர். ஸ்டில்ஸ் பொறுத்தவரை நாகராஜ ராவ் இருப்பது நலம் என்பார். ஆனல் நடிகைகளைப் பொறுத்த வரை, சரோஜா தேவி யையும், ஜெயலலிதாவையும், லதாவையும் அவர்கள் எம். ஜி. ஆருடன் இணைந்து நடித்த படங்கள் வெற்றி பெற்ற திலேயே படத்தயாரிப்பாளர்கள் விரும்பிப் போட்டார்கள்.

# 12

இயக்குனர் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் பிரபல இயக்குனராக இருந்தும் எம். ஜி. ஆரை வைத்துப் படங்கள் தயாரிக்கவில்லை. அவரது தயாரிப்புக்களில் பெரும்பாலும் சிவாஜி கணேசன், முத்துராமன் ஆகியோர்தான் இடம் பெற்று வந்தார்கள். கே. எஸ். ஜி. 'சிவாஜி யூனிட்' என்று சினிமா வட்டாரத்தில் பேசப்பட்டு வந்தது.

ஆனால் எம். ஜி. ஆரிடம் கே.எஸ்.ஜி.க்கு மதிப்பு, மரியாதை, ஈடுபாடு உண்டு. எம். ஜி. ஆரை வைத்து ஒரு படம் தயாரிக்க வேண்டும் என்ற ஆசை அவருக்கு இருந்ததோ இல்லையோ, வேறு விதமாக ஓர் ஏற்பாட்டிற்கு அவர் இணங்க முன் வந்தார்.

'சங்கே முழங்கு' என்று ஒரு படம். எம். ஜி. ஆர். கதாநாயகன். அதை இயக்க ஏற்பாடு செய்யப்பட்டவர் டி. ஆர். ராமண்ணா. அதற்கு யாரை வசனம் எழுத ஏற்பாடு செய்யலாம் என்று யோசித்த போது ராமண்ணாவுக்கு, கே. எஸ். கோபால கிருஷ்ணன் நினைவு வந்தது.

சிரித்துக் கொண்டே ராமண்ணா, கோபாலகிருஷ்ணனிடம் சொன்னார். "என்னுடைய படம் ஒன்றுக்கு வசனம் எழுத வேண்டும் என்று ஆசைப்பட்டாயே, எம். ஜி. ஆர். நடிக்கப் போகிற 'சங்கே முழங்கு' படத்திற்கு நீயே வசனம் எழுது" என்றார்.

ஓர் இயக்குனர், இன்னொரு இயக்குனரை வசனம் எழுத வைத்து, அதில் எம். ஜி. ஆர். நடித்த புரட்சி தமிழ்ப் படவுலகில் நிகழ்ந்தது.

சிவாஜி யூனிட்டைச் சேர்ந்த ஒருவர், தான் நடிக்கும் படத்திற்கு வசனம் எழுதுவதா என்று எதிர்ப்புக் குரல் எழுப்பாமல் கே. எஸ். ஜியின் வளமான வசனங்களுக்குத் தன் நடிப்பினால் சிறப்புச் சேர்த்துத் தந்தார் புரட்சி நடிகர்.

டைரக்டர் ஸ்ரீதருக்கு நடுவில் சில காலம் சில பிரச்னைகள். ஒரே சமயத்தில் இரண்டு மூன்று படங்கள் எடுக்க முன் வந்தார். எதுவும் வெற்றி பெறவில்லை. சினிமா வட்டாரத்தில் நிலைக்க வேண்டுமானால் எம். ஜி. ஆரை வைத்துச் சில படங்களை உருவாக்கினால்தான் நிமிர முடியும் என்ற முடிவுக்கு வந்தார்.

'உரிமைக் குரல்' என்ற படம் ஸ்ரீதரின் தாபக் குரலுக்குப் பரிகாரமாயிற்று. எம். ஜி. ஆரைச் சந்தித்துத் தனக்கு ஒரு படம் நடித்துக் கொடுக்க வேண்டும் என்று ஸ்ரீதர் விருப்பம் தெரிவித்த போது பெருந்தன்மையோடு புன்னகை செய்தார்; ஒப்புக் கொண்டார்.

ஸ்ரீதர் திறமையான இயக்குனர் என்று எம். ஜி. ஆர். நன்கு அறிவார். சிவாஜியை வைத்துப் பல படங்களை இயக்கியவர் என்றும் அவருக்குத் தெரியும். அந்த யூனிட்டை உடைத்துக் கொண்டு ஒருவர் தன்னைத் தேடி வரும்போது அணைத்து ஆதரவு அளிப்பதுதான் விவேகமான செயல் என்பது எம். ஜி. ஆரின் உள்ளமாயிற்று.

. சித்ராலயாவின் ஆடிக்கொண்டிருந்த 'தோணி' அந்தப் படத்தின் வாயிலாக ஆபத்தில்லாமல் தொடர்ந்து பிரயாணம் செய்தது. லதாவுடன் இணைந்து எம். ஜி. ஆர். நடித்த அந்தப் படம் — 'உரிமைக் குரல்' வெற்றி பெற்று, ஸ்ரீதரின் குரல் மீண்டும் தென்னாட்டுப் படவுலகில் ஒலிக்கக் காரணமாயிற்று.

அந்தப் படத்தில் தனக்கு எம். ஜி. ஆர். அளித்த ஒத்துழைப்பும், கால்ஷீட் தொல்லைகளின்றிப் படத்தை முடித்துக் கொடுத்த அக்கறையும் இன்னும் இயக்குனர் ஸ்ரீதரின் நெஞ்சில் நினைவாலயம் எழுப்பி வருகின்றன.

சில சினிமாவுலக சம்பவங்களைப் பற்றி ஸ்ரீதரிடம் நான் பேசிக் கொண்டிருந்தால் எங்கெங்கோ சுற்றி விட்டு எம். ஜி. ஆரிடம் வந்து நிற்பார்.

எம். ஜி. ஆர். நடிப்பாற்றல் நிறைந்த கலைஞர் மட்டுமல்ல, தேர்ந்த டெக்னீஷியன், சினிமாவில் அவருக்குத் தெரியாததே இல்லை என்று சொல்லுவார். ''அந்த அளவுக்குச் சகலகலா வல்லவராக ஒரு சினிமாக் கலைஞர் வேறு யாரும் இருப்பதாகச் சொல்வதற்கு இல்லை. அவருடன் அதிகமான படங்களில் நான் வேலை செய்யவில்லை. ஆனாலும் அந்தச் சில நாட்கள் என்னைப் பெருமையோடு சிந்திக்க வைத்து இருக்கின்றன.''

•

கே. ஆர். பாலன் என்று ஒரு பத்திரிகைக்காரர். சினிமாவுக்காகத் தமிழில் ஒரு தினசரி தொடங்கிய தனிப்பெருமைக்கு அவர் சொந்தக்காரர். கலைஞரின் 'முரசொலி' அலுவலகத்தில் சில காலம் இருந்துவிட்டுத் தன் உழைப்பை மூலதனமாக வைத்து 'தென்றல் திரை' சினிமா தினசரிப் பத்திரிகையை நடத்தி வந்தார். அதில் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

அப்போது எல்லாம் அடிக்கடி எம். ஜி. ஆருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பங்கள் எனக்கு வந்தன. கே. ஆர். பாலனின் மன உறுதி, துணிந்து பல கஷ்டங்களுக்கு நடுவே சினிமா தினசரியை அவர் நடத்தி வருகிற ஆர்வம் ஆகியவை எம். ஜி. ஆரினுல் பாராட்டப்பட்டன.

பாலனுக்குத் தான் ஒரு படத்தில் நடித்துக் கொடுத்து அவரைப் பணத் தொல்லையிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்னும் முடிவுக்கு வந்தார். அதற்கு ஆதரவு அளித்தவர் எம். ஜி. சக்ரபாணி. அவருடன்தான் கே. ஆர். பாலன் அடிக்கடி பேசுவார். அவரது நையாண்டி கலந்த, சுவையான பேச்சைக் கேட்கவும் கிண்டல்களைப் புரிந்து கொண்டு அட்டகாசமாகச் சிரிக்கவும் தெரிந்தவர் பாலன். பேச்சுக்கு நடுவே எம்.ஜி.ஆர். தனக்கு ஒரு படத்தில் நடித்து உதவினுல் உண்மையாகவே தன்னுல் சிரிக்க முடியும் என்று மனம் திறந்தார் பாலன்.

அதற்கு ஒரு நாள் பலன் கிடைத்தது. "தாயின் மடியில்" என்ற தலைப்பில் கே. ஆர். பாலனின் தயாரிப்பில் நடிக்க முன் வந்தார் புரட்சி நடிகர். கதாநாயகி சரோஜா தேவி.

டைரக்டராக யாரைப் போடலாம் என்ற வினு எழுந்த போது ஏ. சுப்பாராவைப் போடலாம் என்று எம். ஜி. ஆர். விரும்பினுர். ஏற்கெனவே ஆந்திரப் படவுலகில் பிரபல இயக்குனர்களாக விளங்கிய சாணக்யா, ('எங்க வீட்டுப்பிள்ளை') புல்லையா, ('ஆசை முகம்') டி. பிரகாஷ் ராவ் ('படகோட்டி') போன்றவர்களிடம் நடித்து வெற்றிப் படங்கள் உருவாக உதவியாகி விட்டது. அதில் விட்டுப் போன பிரபல இயக்குனர் ஏ. சுப்பாராவ்தான். எனவே அவரை 'தாயின் மடியில்' படத்திற்கு இயக்குனராகப் போட எண்ணினுர் எம். ஜி. ஆர்.

சுப்பாராவ் அதற்குச் சம்மதித்தார். எம். ஜி. ஆர். நடிக்கும் தமிழ்ப் படத்தைத் தான் இயக்குவதைப் புரட்சி நடிகரே விரும்பினுர் என்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தார்.

எம். ஜி. ஆர்., சரோஜா தேவி, ஏ. சுப்பாராவ் டைரக்ஷன் என்ற அறிவிப்பு வந்ததும் பட வினியோகஸ்தர்கள் சுறுசுறுப்பு அடைந்தார்கள். படம் வெளி வரும் தேதி எப்போது என்று எம். ஜி. ஆரிடம் கேட்டுக் கொண்டு ஆரம்ப நாள் அன்றே படையெடுத்து வந்தார்கள்.

**வா**கினியில் துவக்க விழா. அப்போது எம். ஜி. ஆர். தி. மு. க.வில் இருந்தார். எனவே படத் தொடக்க விழாவில் ஏராளமான தி.மு.க. பிரமுகர்களும், படவுலகப் பிரபலஸ்தர்களும்,

நடிகர் - நடிகைகளும் கூடியிருந்தார்கள். அவர்களைக் காட்டிலும் பட வினியோகஸ்தர்களின் கூட்டமே அதிகம்!

காமெராவை முடுக்கி விடக் கைராசியுள்ள நாகி ரெட்டியாரைப் படத் தயாரிப்பாளர் பாலன் விரும்பி அழைத்திருந்தார்.

அமைதியும் எளிமையும் உருவான நாகி ரெட்டியார் சாதாரண அரைக் கைக் கதர்ச் சட்டை அணிந்து தொடக்க விழா வுக்கு வந்த பொழுது —

நாகி ரெட்டியாரின் புகழுக்கும், பெரிய ஸ்டுடியோ உரிமை யாளர் என்னும் தகுதிக்கும், அவரது எளிமைக்கும் கொஞ்சமும் தொடர்பில்லாத அற்புதம் தனியாகத் தெரிந்தது. கைராசியுள்ள அந்த மாபெரும் படவுலக மேதையை வழக்கம் போல வணங் கினுர் எம். ஜி. ஆர்.

தேவர் பிலிம்ஸ் படத் துவக்க விழாவைப் பெரும்பாலும் நாகி ரெட்டியார்தான் துவக்கி வைப்பார். அல்லது பூஜை நாளன்று கலந்து கொள்வார். உழைப்பால் உயர்ந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு ஆசி வழங்குவது நாகி ரெட்டி யாரின் பரந்த உள்ளம்.

அதனுல்தான் பட ஆரம்ப விழாவுக்கு அவர் வந்திருந்தார். நாகி ரெட்டியாருக்கு வணக்கம் சொல்லி விட்டு மேக் அப் டச் செய்து கொண்டிருந்த எம். ஜி. ஆர். அங்கிருந்த அவரது அபிமான நண்பர்களிடம் சொல்லிக் கொண்டு இருந்தார். "நாகி ரெட்டியார் அவர்கள் சினிமாவுலகில் மிகக் கண்ணியமான உயர்ந்த மனிதர். உள்ளமும் அப்படிப்பட்டது. அந்த எளிமை எத்தனையோ பேருக்குப் பாடம்!''

காமிராவை சுவிட்ச் ஆன் செய்து வைத்த நாகி ரெட்டியார் தனக்கு அணிவித்த மலர் மாலையை காமிராவிலேயே சுற்றிவிட்டு மெல்லக் கூட்டத்தோடு கூட்டமாக வெளியே போய்விட்டார்.

# 13

**வி**ஜயாவின் 'பானரில்' பல வெற்றிகரமான தமிழ், தெலுங்கு, இந்திப் படங்களை உருவாக்கினுர் நாகி ரெட்டியார். ஒரே சமயத்தில் தெலுங்கு, தமிழ்ப் படங்களை அறிவிப்புச் செய்து, பெரும் பணச் செலவு செய்து படமாக்குவது அவரது வழக்கம்.

அவரது ஆலோசகராக விளங்கி வந்தவர் சக்ரபாணி. இரட்டையர்களோ என்று சொல்லும்படி இருவரது பெயரால் பட அறிவிப்புகளும் விளம்பரங்களும் வெளிவரும்.

எம். ஜி. ஆரைக் கதாநாயகனுக வைத்து விஜயாவின் படமாக 'எங்க வீட்டுப் பிள்ளை'யைப் பிரும்மாண்டமான முறையில் தயாரித்தார் நாகி ரெட்டியார். அதற்கு முன் பலரது படங்களில் நடிக்க வாகினிக்கு எம். ஜி. ஆர். வந்திருந்தாலும் விஜயாவின் தயாரிப்பில் நடித்த முதல் படம் — முதல்தரப் படம்— அதுவேதான். அதற்கு என்று அமைத்திருந்த செட், ஒரு மாடி வீட்டையே நாகி ரெட்டியார் படத்திற்காகக் கட்டிவிடச் சொன்னுரோ என்ற பிரமிப்பை உண்டாக்கியது! ஏனெனில் அவர் கட்டடக் கலையிலும் வல்லுனர்.

வாகினி ஸ்டுடியோவைப் பார்க்க வந்த பார்வையாளர்கள் 'எங்க வீட்டுப் பிள்ளை'க்குப் போட்டு வைத்திருந்த மாடியையும் அலங்காரங்களையும் கண்டு விட்டு, வைத்த விழிகளை வாங்கவில்லை!

அதற்கு முன் எம். ஜி. ஆர். சில இரட்டை வேடப் படங்களில் நடித்து இருந்தாலும், அதில் அவர் ஏற்றிருந்த கோழை ஜமீன்தார் வீட்டு வாலிபனின் பாத்திரம் முற்றிலும் மாறுபட்டது.

தலையில் பட்டுக் குல்லாய், முகத்தில் வழியும் அசடோடு ஒரு விதமான பயம், உடம்பில் நாணம் கலந்த கோணல்கள், பேச்சிலும் அதுவே — அப்படி ஒரு வித்தியாசமான வேடம்.

அதில் எம். ஜி. ஆர். தனித் தன்மையோடு நடித்து இருந்ததைத் தமிழக ரசிகர்கள் இன்னும் மறந்து விடவில்லை. அந்த 'எங்க வீட்டுப் பிள்ளை' மற்ெருரு சாதனை புரியவும் காரணமாயிற்று. புது டில்லிப் பாராளுமன்றத் தேர்தலில் சுவரொட்டிகளில் 'உங்க வீட்டுப் பிள்ளை மாறன்' என்று உரிமையோடு குறிப்பிட்டு அவருக்கு வாக்கு அளிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். வாக்காளர்களும் (அப்போது அ. தி. மு. க. பிரியவில்லை) தங்கள் வீட்டுப் பிள்ளையாகவே மாறனைக் கருதி வாக்குகளை வாரி வழங்கி வெற்றி பெறச் செய்தார்கள்.

எம். ஜி. ஆர். நடித்திருந்த 'எங்க வீட்டுப் பிள்ளை' மாறன் அரசியலில் — தேர்தலில் — புகழ் பெற — வெற்றி பெற — எப்படி உதவியது என்பதை நினைவு படுத்தவே இதைக் குறிப்பிட்டிருக்கிறேன்.

அந்தப் படத்தில் அப்பாவி (!) எம். ஜி. ஆரை வில்லன் நம்பியார் மிரட்டிச் சாட்டையினுல் அடிக்கிற காட்சி வருகிறது. நம்பியார் சாட்டையைப் பிரமாதமாகச் சொடக்கி எம். ஜி. ஆரை அடிப்பது போலத்தான் நடித்தாரே தவிர, அடித்து விடவில்லை!

குறிப்பிட்ட காட்சி படமான பிறகு அங்கிருந்த என்னிடம் நம்பியார் சொன்னுர். ''இந்தக் காட்சியை எம். ஜி. ஆரின் ரசிகர்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். 'எங்கள் எம். ஜி. ஆரை எப்படிச் சாட்டையால் அடிக்கலாம்?' என்று என்னிடம் சண்டைக்கு வரப் போகிருர்கள்!''

படம் வெளியானதும் நம்பியாரின் வாக்கு உண்மையாயிற்று.

ரசிகர்கள் பொங்கினுர்கள். ''எப்படி எம். ஜி. ஆரை நம்பியார் சாட்டையால் அடிக்கலாம்?'' என்று கேட்டுக் குமுறினுர்கள். சில ஊர்களில், சில தியேட்டர்களில் சிறு கலாட்டாக்கள் கூட நடந்தன. ஆனுல் —

அதே படத்தின் இறுதிக் காட்சியில் எம். ஜி. ஆர். வில்லன் நடிகர் நம்பியாரைச் சாட்டையால் திரும்ப விளாசித் தள்ளிப் பழி தீர்க்கிருர். அந்தக் காட்சி வரும் வரை பொறுமை இல்லாமல் சில ரசிகர்கள் கொந்தளித்து எழுந்தது உண்மை.

படங்களில் கதையமைப்புப்படி சில கதாபாத்திரங்களை ஏற்று எம். ஜி. ஆர். நடித்தாலும் ரசிகர்களுக்கு மத்தியில் அவர் எம். ஜி. ஆராகவே திகழ்ந்தார். கண்களில் தூசு விழுந்து புரட்சி நடிகர் துடைத்துக் கொண்டால் கூட அவரது லட்சோப லட்சம் ரசிகர்கள் தங்களுடைய கண்களில் தூசு விழுந்து விட்டதாகவே கருதித் தவித்தார்கள்.

அதனுல் தான் படத்திற்கு ஒப்புக் கொள்வதற்கு முன் காலம், மக்களின் விழிப்புணர்வு, ஆகியவை மதிக்கப்படுகிறதா என்பதில் எம். ஜி. ஆர். தனி கவனம் செலுத்துவது வழக்கம்.

'எங்க வீட்டுப் பிள்ளை' சினிமா ரசிகர்கள் சங்கத்தின் பரிசையும், ஒரு சினிமாப் பத்திரிகை நடத்திய சிறந்த படத்திற்குரிய பரிசையும் பெற்றது.

ஜெமினியில் தயாரித்த 'ஒளி விளக்கு' படம் எம்.ஜி.ஆர். நூருவது படமாகும். தமிழிலும், தெலுங்கிலும், இந்தியிலும் பல வெற்றிப் படங்களை உருவாக்கிய ஜெமினி வாசன், எம் ஜி ஆரை நடிக்க விரும்பி அழைத்தார்.

பொதுவாக, ஜெமினியில் அதன் அதிபர் — 'பாஸ்' என்று மரியாதையுடன் அழைக்கப் பெற்ற வாசனின் வாக்கு ஒரு



பெரியாருடன்...

'எங்க வீட்டுப் பிள்ளை' படவிழாவில் அப்போதைய முதல்வர் திரு. பக்தவத்சலத்துடன்





பாரத் விருது பெற்ற போது...

மாபெரும் மனிதரின் செல்வாக்கு. சர்வாதிகாரம் நிறைந்தது, நடிகர்களின் புகழ், பெருமை இவை அந்த ஸ்டுடியோவில் அவ்வளவாக மதிக்கப்படுவது இல்லை.

வாசனுக்கு எதிரில் உட்காரச் சினிமாக் கலைஞர்கள் அஞ்சுவார்கள். தங்களுடைய காரை நுழைவு வாசலில் ஓர் ஓரமாக நிறுத்தி வைத்து விட்டு இறங்கி நடந்து வந்து மேக்-அப் போட்டுக் கொள்ள வேண்டும்.

அப்படிப்பட்ட கெடுபிடிகள், எம். ஜி. ஆர். 'ஒளி விளக்கு' படத்தில் நடித்த போது அங்கு தளர்ந்து போயிருந்தன.

புரட்சி நடிகருக்கு மக்களுக்கு மத்தியில் இருந்த மதிப்பு, அவர் கதாநாயகனாக நடிக்கும் படங்களுக்குப் பெரிய அளவில் கிடைக்கும் பண வசூல் மார்க்கெட் நிலவரம். இவை வாசனுக்குத் தெரிய ஆரம்பித்து இருந்தன. அதனால்தான் ஜெமினியின் 'ஒளி விளக்கு' அறிவிக்கப்பட்ட போது எம். ஜி. ஆரே அதில் கதாநாயகனாக நடிக்க ஏற்றவர் என்னும் முடிவுக்கு வந்தார் வாசன்.

வாசனுக்கு அருகில் உட்காரும் தகுதியை எம். ஜி. ஆர் பெற்றார். வாசனின் பெருமைகளையும், ஜெமினி நிறுவனத்தின் தனிச் சிறப்புகளையும் நன்கு அறிந்திருந்த எம். ஜி. ஆர். சில சமயங்களில் மேக்-அப் போட்டுக் கொண்டு நடிக்க நேராகவே சென்று விடுவார். அவரை எப்போதாவது பார்க்க வரும் ஜெமினி வாசன், எம் ஜி. ஆரை இழுத்துத் தனக்குப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டதை நான் கண்டிருக்கிறேன்.

எம். ஜி. ஆர் கூட 'முதலாளி' வாசனுக்குப் பக்கத்தில் உட்காரச் சற்றுத் தயங்கி அவரிடமிருந்து மெல்ல விடுவித்துக் கொண்டு போக முயற்சிப்பது உண்டு. ஆனால் எம். ஜி. ஆர். புரட்சி நடிகராக மட்டுமின்றி, மக்கள் திலகமாகவும் இருப்பதை அறிந்திருந்த வாசன் பெரிய அளவில் அவரை மதிக்கத் தொடங்கினார்.

அதே ஸ்டுடியோவில் எம். ஜி. ஆரின் பெருமதிப்பிற்குரிய எம்.கே ராதா ஒப்பந்தக் கலைஞராகப் பணியாற்றி வந்த காலத்தில் அவர் வாசனுக்குப் பக்கத்தில் சமமாக உட்கார்ந்தது இல்லை. ஆனால் எம். ஜி. ஆர். விரும்பவில்லை என்றாலும் உட்கார வைக்கப்பட்டார். ஜெமினியின் சினிமா வரலாற்றில் இது ஒரு திருப்பம். அதை ஓரளவு திருப்பியவர்கலைவாணர்; முற்றிலும் திருப்பியவர் எம். ஜி. ஆர்.

எம். ஜி. ஆரின் நூறுவது படம் என்னும் சிறப்புக்குரிய 'ஒளி விளக்கு' வெளியானபோது அவர் 'அடிமைப் ஜெய்ப்பூரில் பெண்' படப்பிடிப்பில் இருந்தார்.

அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த நடிகர் சோ திடீரென்று எம். ஜி. ஆரிடம் வந்து, "உங்களுடைய நூறுவது படம் தமிழ்நாட்டில் வெளியாகி பிரமாதப்படுகிறது. அது ஜெமினி தயாரிப்பு. நீங்கள் என்னவென்றால் எவ்விதமான பரபரப்பும் இல்லாமல் ஜெய்ப்பூரில் மாட்டிக் கொண்டு ஷூட்டிங்கில் இருந்து வருகிறீர்களே? உங்களுடைய அமைதி எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!" என்றார்.

ஒரு சிரிப்பு, அதில் பெருந்தன்மையின் ஒளி இரண்டும் எம். ஜி. ஆருக்குச் சொந்தம் "அதனால் என்ன?" என்றார் எம். ஜி. ஆர் அதே அமைதியோடு. "என்னவா? தமிழ்நாட்டில் இப்போது நீங்கள் இருந்தால் பெரிய விழாக் கொண்டாடி இருப்பார்கள் உங்கள் ரசிகர்கள்" என்று சொன்ன சோ சில நிமிடங்களுக்குப் பின் வாழ்த்து மடல் ஒன்று தயாரித்து அங்கு வந்திருந்த படப்பிடிப்புக் குழுவினருக்கு நடுவில் எம்.ஜி.ஆரை அமரச் செய்து 'விழா' எடுத்து விட்டார்!

சோவுக்குச் சில விஷயங்களில் எம். ஜி. ஆருடன் கருத்து வேறுபாடு இப்போது உண்டு. அப்போது சோ அரசியல் பற்றி எழுதாத காலம். எம். ஜி. ஆர். பதவியில் அமராத நேரம். சினிமாவில் சகலமும் தெரிந்த செல்வாக்குள்ள கலைஞர் எம்.ஜி.ஆர். என்பதில் அன்று மட்டுமல்ல—

இன்றும் சோவுக்கு அபிப்பிராய பேதம் கிடையாது.

# 14

பிரபல இயக்குனர் பஞ்சு (கிருஷ்ணன்) இயக்கிய 'பெற்றால்தான் பிள்ளையா?' படத்தில் எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்தார். அதில் எம். ஆர். ராதாவும் இருந்தார்.

இருவரும் இணைந்து நடிப்பது புதியது அல்ல. ஏற்கனவே தேவர் பிலிம்ஸ் படங்களிலும் வேறு சிலருடைய தயாரிப்புக் களிலும் அவர்கள் நடித்து இருக்கிறார்கள்.

ராதாவிடம் ஒரு மதிப்பும் மரியாதையும் எம். ஜி. ஆருக்கு உண்டு. நாடக உலகில் மூத்தவர் என்பதினாலும், பெரியாரின்

தொண்டர் என்பதினுலும், சில கொள்கைகளேத் துணிந்து நாடக மேடையில் சொல்லி வந்தவர் என்பதினுலும் ராதாவிடம் எம். ஜி. ஆர். மதிப்புக் கொண்டிருந்தார். ஆனுல்—

ராதா சில பத்திரிகைகளில் மறைமுகமாக எம். ஜி. ஆரை ஏனே தாக்கிப் பேட்டி அளித்தார். 'பெரிய புரச்சி வீரர்' என்று கூட ஏளனமாகச் சொன்னுர். அப்படி எல்லாம் ராதா பேசியும் ஏசியும் கூடப் புரட்சி நடிகர் அவரை ஒரு விரோதியாகவே எண்ணியது கிடையாது. யாராவது எம். ஜி ஆரிடம், 'ராதா அண்ணன் இப்படிச் சொன்னுர், அப்படிப் பேசினுர்' என்று சொன்னுலும் அவ்வளவாக ஆத்திரமோ படபடப்போ அடைய மாட்டார்.

'பெற்ருல்தான் பிள்ளேயா?' படம் முடிந்து வெளி வந்த சில நாட்களுக்குப் பிறகுதான் அந்தச் சம்பவம்—ரிவால்வரினுல் எம். ஜி. ஆர். சுடப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றது,

பரங்கிமலேயில் உள்ள எம். ஜி. ஆரின் இல்லத்திற்கு எம். ஆர். ராதா சென்ற போது சிறிது நேரம் எம். ஜி. ஆர் வழக்கமான மரியாதையுடன் அவருடன் பேசிக்கொண்டு இருந்தார். பின்னரே அந்தத் திடுக்கிடும் ரிவால்வரின் 'டமில்' நிகழ்ந்தது.

கன்னத்திற்குக் கீழே கழுத்துப் பகுதியில் குண்டடிபட்டு எம் ஜி. ஆர். ராயப்பேட்டை மருத்துவ மனேயில் சேர்க்கப்பட்ட போது சென்னே நகரமே வரலாறு காணுத கூட்டமாக மருத்துவ மனேயைச் சுற்றிக் கொண்டது. போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுச் சில மணி நேரம் அந்தப் பகுதியில் வாகன நடமாட்டம் ஸ்தம்பித்து விட்டது. அப்போது பீட்டர்ஸ் சாலேயில் ஒரு பத்திரிகை அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த நான் செய்தி கேட்டுப் பதறி ஓடினேன்.

சுலபத்தில் உள்ளே சென்று எம். ஜி. ஆரைப் பார்க்க இயலவில்லே. திரையுலகப் பிரமுகர்கள், நடிகர், நடிகைகள், தி. மு க. தலேவர்கள், மற்றும் எம். ஜி. ஆரின் நண்பர்கள், குடும்பத்தினர், பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள்—

விம்மிக் கொண்டு, கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு, துடித்துக் கொண்டு, தவித்து நின்று கொண்டு இருந்தார்கள். கூட்டத்தினரைக் கட்டுப்படுத்தப் போலீசார் பெரும் பாடு பட்டார்கள். எம். ஜி. ஆரின் சகோதரர் சக்ரபாணி ஒரு பக்கம் சோகமே உருவாக நின்று கொண்டு இருந்தார். அவரை நான் பார்க்கவில்லே என்ருல் சுலபத்தில் எம். ஜி. ஆரைப் பார்த்து

இருக்க முடியாது. எம். ஜி. ஆரைச் சுற்றி ஏகப்பட்ட டாக்டர்கள் பாய்ந்து உள்ளே சென்றிருந்த குண்டை வெளியே எடுக்கப் படாத பாடு பட்டார்கள்.

எம். ஜி. ஆர். நல்ல நினைவோடு காணப்பட்டார். தம்மைச் சுற்றிச் சோக வடிவங்களாகக் காணப்பட்டவர்களைத் தன் பார்வையினால் வருடினார். வருடுவப் பட்டவர்களில் நானும் ஒருவன்.

அப்போது மக்கள் திலகம் அங்கிருந்தவர்களிடம் சொன்னார்: "என்னை நீங்கள் கவனிப்பது இருக்கட்டும், அவருக்கு (எம். ஆர். ராதா) உடம்பு எப்படி இருக்கிறது என்று கவனியுங்கள். எல்லாரும் என்னைச் சுற்றியே இருக்கிறீர்களே?"

குண்டடிபட்ட நிலையிலும் குணக் குன்றாக நிமிர்ந்து நின்றார். தன்னைச் சுட்டவரை ஒரு விரோதியாக நினைக்காமல், எவ்வளவு பெருந்தன்மையாக ராதாவைக் கவனிக்கும்படி கூறினார்!

அருகில் இருந்த நான் எம். ஜி. ஆர். அப்படிச் சொன்னதைக் கேட்டபோது, 'எப்படிப்பட்ட பண்பாளர்' என்று எண்ணி என் மேனியைச் சிலிர்த்துக் கொண்டேன்.

விரோதிகளிடம் கனிவும் பரிவும் காட்டுகிற உள்ளம் ஒரு சில மகாத்மாக்களிடம்தான் இருக்கும், அந்த உள்ளம் எம். ஜி. ஆரிடம் இருந்தது.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, அனைத்திந்தியா, ஸ்ரீலங்கா, மற்றும் கடல் கடந்த நாடுகளிலுள்ள சினிமா ரசிகர்கள் அனைவரும் கேட்ட கேள்வி ஒன்று. "எம். ஜி. ஆருக்கு உடம்பு எப்படி இருக்கிறது? 'எப்போது உடல் நலம் பெற்றுச் சினிமாவில் மீண்டும் நடிப்பார்?'

அவற்றிற்கு எல்லாம் மருத்துவ விடுதியிலிருந்து டாக்டர்களும், எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத்தினரும், பிறகு ஒரு சமயம் எம். ஜி. ஆரும் அறிக்கை விட்டு ரசிகர்களின் துடிப்புக்கு ஆறுதல் சொல்ல வேண்டியிருந்தது. எம். ஜி. ஆர். ஓரளவு உடல் நலம் தேறி மருத்துவ விடுதியிலிருந்து வீடு திரும்பிய சில நாட்களுக்குப் பிறகு, தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலில் தி. மு. கழகம் போட்டியிட வேண்டியதிருந்தது. காங்கிரஸ் ஆட்சியை எப்படியும் கெல்லி எறிந்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அறிஞர் அண்ணா தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வந்தார்.

அதுவரை எம். ஜி. ஆர். போன்ற கழகக் கலைஞர்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபட அண்ணு வாய்ப்பு அளிக்கவில்லை. கலை நிகழ்ச்சிகள் நடத்தித் தேர்தல் நிதி வசூலிக்கவும், தேர்தல் கூட்டங்களில் கலந்து கொண்டு பிரசாரம் செய்யவுமே அவர்கள் பயன்பட்டு வந்தார்கள்.

ஆனால் அந்தத் தடவை அறிஞர் அண்ணுவின் திட்டம் வேறு விதமாக அமைந்தது. பரங்கிமலைத் தொகுதியில் எம். ஜி. ஆரை நிற்க வைக்கும் ஏற்பாடுதான் அது. எம்.ஜி.ஆருக்கு இருந்து வந்த செல்வாக்கைக் கண்டு விட்டுத்தான் அறிஞர் அண்ணு அவரைத் தேர்தலில் ஈடுபட வாய்ப்பை அளித்தார்.

ஆனால் பரங்கிமலையில் அப்போது காங்கிரசுக்குச் செல்வாக்கு மிகுதி என்று நினைத்தார்கள். அதோடு காங்கிரசின் சார்பில் நிற்க வைக்கப்பட்டிருந்த ரகுபதிக்கு அந்தத் தொகுதியில்—பரங்கிமலை வட்டாரத்தில்—பெரிய அளவில் சொந்தச் செல்வாக்கு இருக்கிறது. அவரை வெற்றி பெற இயலாது என்ற பேச்சும் அடிபட்டது. இன்னென்றும் சொன்ஞர்கள். எம். ஜி. ஆரின் சினிமாச் செல்வாக்கு வேறு, தேர்தலில் வெற்றி பெறுவது வேறு என்றும் கூறிஞர்கள்.

இவ்வளவையும் தவிடுபொடி செய்து பரங்கி மலையில் பெரு வெற்றி பெற்றுர் புரட்சி நடிகர்.

அப்போது செய்யப்பட்ட தேர்தல் பிரசாரங்களில் எம்.ஜி.ஆர். குண்டடி பட்ட தோற்றத்துடன் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு இருந்தன. தேர்தல் கூட்டங்களில் சிறிது சிரமத்தோடு கலந்து கொண்ட எம். ஜி. ஆர். வழக்கமான கம்பீரக் குரலில் பேச இயலாமல் குளறலோடுதான் பேச முடிந்தது. அந்தச் சுவரொட்டியும், பேச்சும் மக்கள் மத்தியில் மாபெரும் இரக்கத்தைச் சுரக்க வைத்தன.

சினிமாச் செல்வாக்கு அரசியலுக்கும் பயன் பெறும், அதாவது தூய்மையான கலைஞராக இருந்தால் என்பதற்குப் பரங்கிமலையில் எம். ஜி. ஆர். பெற்ற வெற்றி சான்று.

ஏற்கனவே நியமன உறுப்பினராகத் தமிழக மேலவையில் எம். ஜி. ஆர். சில ஆண்டுகள் பதவி வகித்துச் சிறப்புச் சேர்த்தது உண்டு. அப்படிப்பட்ட உறுப்பினர் பதவி மக்களிஞல் தரப் பட்டது அல்ல, தேர்தலில் போட்டியிட்டு நேரடியாக வந்தது இல்லை என்பதை அவர் உணர்ந்து இருந்தார். அந்த உணர்வு உள்ளூர இருந்ததே தவிர, தி. மு. க.வின் தலைவர் அறிஞர்

அண்ணு சொல்லாதவரை தன் எண்ணத்தை உள்ளத்திலே முடக்கி வைத்திருந்தார்.

எம். ஜி. ஆர். பரங்கிமலேயில் பெற்ற வெற்றி வேறு சில நம்பிக்கைகளுக்கு வித்திட்டது. எஸ். எஸ். ஆரைத் தேனித் தொகுதியில் நிற்க வைத்தார் அண்ணு. முதல் தடவை எஸ். எஸ். ஆர். அங்கு வெற்றி பெறவில்லே என்றுலும் தன் இலட்சியத்தை அவர் விடவில்லே. அடுத்து வந்த தேர்தலில் அதே தேனியில் பிரபல காங்கிரஸ்காரரான தியாகராஜனே வென்ருர் எஸ். எஸ். ஆர்.

அதிலிருந்து கலேஞர்கள் அரசியலில் ஈடுபடத் தகுதியானவர் கள் தாம் என்பதை எம். ஜி. ஆர். போன்றவர்கள் நிலேநிறுத்திக் கொண்டார்கள்.

எம். எல். ஏ. ஆவதற்கு முன் எம். ஜி. ஆர். ஏற்று வந்த சினிமாக் கதாபாத்திரங்களின் தன்மை ஒருவிதமாக இருந்து வந்தது. எம். எல். ஏ.யையும் சேர்த்துச் சினிமா டைட்டிலில் அவரது பெயர் போடப்பட்ட பின்னர்—

அரசியல்வாதிகளின் கடமைகள் எப்படி இருக்க வேண்டும், மக்களின் குறைகளே அவர்கள் எப்படிக் களேய வேண்டும் என்பதைச் சில கதாபாத்திரங்களின் வாயிலாக எடுத்துரைத்தார்.

பரங்கி மலேயில் எம். ஜி. ஆர். வெற்றி பெற்ற பிறகு சட்ட மன்ற நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டார். மக்களின் வாக்குறுதிகளேப் பெற்று, சட்ட மன்ற உறுப்பினரான பின் தமக்கு வேறு சில புதுக் கடமைகள் ஏற்பட்டிருப்பதை உணர்ந்து கொண்டார்.

யாருக்கு எப்படிப்பட்ட இன்னல்கள் வந்தாலும் ஓடிச்சென்று துயர் துடைக்கும் துடிப்புக் கொண்ட உள்ளம் எம். ஜி. ஆரிடம் என்றும் உண்டு. இப்போது எம். எல். ஏ. என்ற முறையில் ஆளுவோரிடம் தம் தொகுதி மக்களின் குறைகளே உரிமையோடு எடுத்து உரைத்து உதவுகிற புதுக் கடமையும் சேர்ந்து கொண்டது.

அவர் பரங்கிமலே எம்.எல்.ஏ. ஆனபிறகு ஏற்கனவே சினிமாக்காரர்களினுல் நிறைந்திருந்த அவரது இல்லம்—

அரசியல்வாதிகளின் பிரவேசத்திஞல் புதுப் பரபரப்பு அடைந்தது. சினிமாவில் நடிப்பதற்குரிய நேரம் இனிக் குறைய வேண்டியதுதான். எம்.எல்.ஏ. ஆன பிறகு தொகுதி மக்களின் குறைகளேக் கேட்காமல் ஸ்டுடியோவின் மேக்-அப் அறை

களுக்குள் புகுந்து கொண்டு விடுவது நல்லதல்ல என்ற முடிவுக்கு அவர் வந்தார். அதன் காரணமாக—

குறிப்பிட்ட சிலருடைய படங்களில் மட்டும், சில புதுமையான கருத்துள்ள கதைகளில் மட்டும் நாட்டுக்கேற்ற நற்பாத்திரமேற்று நடிக்க முன்வந்தார். சட்ட மன்றத்தில் எம்.ஜி.ஆர். அப்போது அவ்வளவாகப் பேசவில்லை. பொதுக் கூட்டங்களில் பேசுவதற்கும் சட்ட மன்றத்தில் பேசுவதற்கும் வேறுபாடுகள் உள்ளன என்பதைப் புரிந்து கொண்டு, சட்டப் பிரச்னைகளைப் புரிந்து கொள்வது எப்படி என்பதில் கவனம் செலுத்தினர்.

''சட்ட மன்றத்தில் எம். ஜி. ஆரின் குரல் கேட்கவே இல்லையே?'' என்று கூடச் சில மாற்றுக் கட்சியினர், முக்கியமாகக் காங்கிரஸ்காரர்கள் அவரைக் கேலி செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் அன்று எம்.ஜி.ஆர். எம்.எல்.ஏ. பதில் சொல்லவில்லை. ஏனெனில் சட்ட மன்றத்தில் பேசவேண்டிய நேரம் வரும் என்று அன்றே அவர் தெரிந்து வாய்மூடி மௌனியாக இருந்தார்.

# 15

**எம்**.எல்.ஏ. ஆனபிறகு அவர் நடித்து வெளிவந்த படங்கள் இரண்டு: ஒன்று 'அடிமைப் பெண்'. மற்றொன்று 'உலகம் சுற்றும் வாலிபன்'.

இரண்டாவது படம் ஜப்பான், மலேஷியா போன்ற வெளிநாடுகளில் உருவாக்கப்பட்டு பெருவெற்றி பெற்றது. படத்தின் இயக்குநராக இருந்து எம்.ஜி.ஆர். தம் தனித் திறமைகளை நிரூபித்திருந்தார். அந்தப் படப்பிடிப்புக் குழுவினருடன் சென்று இருந்த ப. நீலகண்டன், எம். ஜி. ஆரின் இயக்கும் திறமையைக் கண்டு வியப்பின் வடிவமாகி விட்டார். எப்படி எல்லாம் காட்சிகளை அவர் படமாக்கினர், வெளிநாட்டுப் படப்பிடிப்புக்கு ஏற்றவாறு சம்பவங்களை எப்படிக் கொண்டு போனர், சண்டைக் காட்சிகளை எவ்வாறு அமைத்தார் என்று சென்னை திரும்பியதும் என்னிடம் ஒரு சமயம் பிரமிப்போடு கூறினர். படம் முடிந்து 'எடிட்டிங்' செய்த போது எம். ஜி. ஆரின் ஞானம் மேலும் பிரமிக்கும்படி இருந்தது என்று படத்தின் முதல் பிரிண்டைப் பார்த்தவர்கள் சொன்னர்கள்.

ஏனெனில் அதற்கு என்று சில இயக்குனர்கள் இருக்கும்போது, அவர்களுக்குப் போட்டியாகத் தாம் ஈடுபட வேண்டியது இல்லை' என்பது எம். ஜி. ஆரின் பெருந்தன்மையான அபிப்பிராயமாக இருந்தது. சிலர் அவரைக் கட்டாயப்படுத்தியதன் காரணமாகத் தான் இரண்டே இரண்டு படங்களை மட்டுமே அவர் இயக்கினர். எம்.எல்.ஏ. ஆனபிறகு அரசியலில் ஈடுபட வேண்டியிருக்கிறது' அதற்கு நடுவே பட இயக்கம் வேறு எதற்கு என்று சொல்லிக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர். மேற்கொண்டு அந்தத் துறையில் ஈடுபடவில்லை.

அறிஞர் அண்ணு தமிழக முதல்வரான பிறகு எம் ஜி. ஆரின் பொறுப்பு மேலும் அதிகமாயிற்று. காங்கிரஸ் ஆட்சியை அகற்றி தி.மு.க. அமைச்சரவை அமைய அரும்பாடு பட்ட அண்ணுவுக்குத் தம் சொந்தச் செலவில் சிலை வைத்தார்.

அண்ணு எம். ஜி. ஆரின் இதயத்தில் குடியிருந்த கோயில். அவருக்குச் சிலை வைத்தது நன்றிக் கடன் மட்டுமல்ல, மக்களுக்கு மத்தியில் மக்களின் தலைவரின் உருவம் இருக்கட்டும் என்று நினைத்துச் சிலை எழுப்பினர்.

ஏதாவது சினிமாவுக்கேற்ற கதையை எம்.ஜி.ஆர். தேர்வு செய்தால் அண்ணுவின் கொள்கைகள் எங்காவது இடம்பெறும்படி பார்த்துக் கொள்வார். ரசிகர்களிடமும் அந்தக் கருத்தை வலியுறுத்துவார். எம்.எல்.ஏ. ஆன பிறகு அண்ணுவின் அரசியல் கொள்கைகள் எம். ஜி. ஆர். ஏற்று நடித்த கதாபாத்திரங்களில் பிரதிபலித்தன.

ஒரு காலத்தில் 'காஞ்சித் தலைவன்' என்று ஒரு தமிழ்ப் படத்திற்குப் பெயர் வைக்கச் சொல்லி, அதைச் சொல்லும் போதெல்லாம் அண்ணுவின் நினைவு வரட்டும் என்று விரும்பினர்.

'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' என்று ஒரு படத்திற்குப் பெயர். அது ஒரு சரித்திரப் படம் என்றாலும் சில பழைய ஆதாரங்களைப் பின்னணியில் வைத்துக் கொண்டு, அப்போது நாட்டிற்குத் தேவையான அரசியல் கருத்துக்களை அதில் கையாண்டு இருந்தார்.

எம்.ஜி.ஆரைத் தவிர வேறு யாராவது அதில் கதாநாயகனாக நடித்து இருந்தால் ஜிகினுச் சட்டையின் பளபளப்பும், ஆடம்பர அரங்கின் மினுமினுப்பும், சில அர்த்தமற்ற உரையாடல்களுமாக அந்தப் படம் தயாராகி இருக்கும்.



ராஜ்காட்டிலுள்ள காந்தி சமாதி முன்பு...



தமிழக முதல்வரும் ஆந்திர முதல்வரும்.

ஆனால் புரட்சி நடிகர் காலமறிந்து சில அரசியல் கருத்துக்களை மணிமகுடத்தில் மாணிக்கக் கற்களைப் பொருத்துவது போல அதில் அமைக்கச் சொல்லி இருந்தார்.

மதுரை, ஒரு காலத்தில் காங்கிரஸ்காரர்களின் கோட்டையாக இருந்தது. பிறகு தி.மு.க.வின் கைக்கு வந்தது. இப்போது அ.தி.மு.க.வின் கோட்டையாகி விட்டது. மதுரையை காங்கிரஸ் காரர்களிடமிருந்து மீட்ட சுந்தர பாண்டியன் எம்.ஜி.ஆர்.தான் என்பதில் ஐயமில்லை.

சில தேர்தல் காலங்களில் தி.மு.க.வில் அவர் இருந்த போதும் சரி, அ.தி.மு.க. தொடங்கிய பின்னரும் சரி. மதுரையில் சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்து, அண்ணாவின் கொள்கைகளைப் பரப்பி, மக்களைத் தம் பக்கமாக இழுப்பதில் வல்லவராக விளங்கினார்.

அந்தச் சாமர்த்தியம் பற்றி அறிஞர் அண்ணா ஒரு சமயம் இப்படிக் குறிப்பிட்டது எனக்கு நினைவு இருக்கிறது. "எம். ஜி. ஆரைப் பாராட்டுவது, என்னை நானே பாராட்டிக் கொள்வதாகக் கருதப்படும். எம்.ஜி.ஆர். என்றால் அவர் தாங்கி யுள்ள கொள்கை எதுவென்பது நாடு அறியும். இந்தக் கனி (எம்.ஜி.ஆர்.) தங்கள் மடியில் விழாதா என்று பலர் எதிர் பார்த்தனர். அது என் மடியில் வந்து விழுந்தது."

அதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் எம்.ஜி.ஆர். சத்யா மூவீசுக்காக நடித்த ஒரு படத்திற்கு 'இதயக் கனி' என்று பெயர் சூட்டினார் போல இருக்கிறது!

எம்.ஜி.ஆரின் தேர்தல் பிரசார ஆற்றலை அந்தக் காலத்தில் கண்ட ஒரு பிரபல ஆங்கிலப் பத்திரிகை என்ன எழுதிற்று தெரியுமா?

"...இனி எம்.ஜி.ஆர். தேர்தல் கூட்டங்களில் பேசுவதற்கு நேரே வரவேண்டும் என்பது கூட அவசியமில்லை. அவரது தலைக் குல்லாவும், கறுப்புக் கண்ணாடியும் வந்தால் போதும்!"

அண்ணாவின் முழு அபிமானத்தைப் பெற்றிருந்த எம்.ஜி.ஆர். 1957-இல் இருந்து 1971 வரை தி.மு.க. தொடர்ந்து தேர்தல் களில் வெற்றி பெறக் காரணமாக இருந்தார். அப்போது அவர் இரட்டை விரல்களைக் காட்டவில்லை. ஒரு விரலைத்தான் மக்களுக்கு மத்தியில் காட்டினார். 'இந்த விரல், இதற்குச் சொந்தக்காரனாகிய நான், என்னுடைய தலைவர் அண்ணாவின் சொல்படிதான் நடப்பேன். அவரது கொள்கைகளைத்தான் பரப்புவேன்."

# 16

மைசூரில் 'மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்' படப்பிடிப்பின்போது ஒரு சம்பவம்.

எம். ஜி. ஆர். வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டு, ஏராளமான பேர் திரண்டு ஸ்டுடியோ வாசலில் கூடிவிட்டார்கள். போக்குவரத்து தடைப்படும் அளவுக்குக் கூட்டம்! "உள்ளே சென்று எங்கள் அபிமான கலைஞரைப் பார்க்க வேண்டும்" என்று ஆரவாரம் செய்தார்கள். காவலாளி அவர்களை உள்ளே அனுமதிக்கவில்லை. சிலரை அவர் ஒதுக்கித் தள்ளினார். வேறு சிலரை விரட்டினார். மற்றும் சில பேரைக் கைத்தடியினால் அடித்தார்.

அதனால் ஸ்டுடியோவின் வாசலில் எழுந்த கூக்குரலும் கத்தலும் படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்த எம். ஜி. ஆருக்கு எட்டியது.

"வெளியே என்ன கூச்சல்?" என்று விசாரித்தார் எம்.ஜி.ஆர்

"உங்களைக் காண வந்த கூட்டம் ஆர்ப்பாட்டம் செய்கிறது" என்று சொன்னார்கள்.

"அப்படியா?" என்று எம். ஜி. ஆர். வழக்கமான பெருந்தன்மையோடு கேட்டுவிட்டு விரைவாக மேக்-அப்போடு படப்பிடிப்பு அறையிலிருந்து வெளியேறினார். ஸ்டுடியோவின் நுழைவு வாசலுக்கு வந்தார்.

கூட்டத்தினருக்கு நடுவே புகுந்தார். "உங்களைக் காவலாளி உள்ளே விடாதது தவறுதான். அது அவருடைய தவறு அல்ல. பொதுவாகப் படப்பிடிப்புக்கு இடையூறாக இருக்கும் என்று சொல்லிக் காவலாளிக்கு அப்படி ஓர் உத்தரவு போட்டு இருக்கிறார்கள்" என்று எம். ஜி. ஆர். சொல்லிவிட்டு அவர்களுக்கு நடுவே கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் சற்று நேரம் பேசினார். சிலருடன் கை குலுக்கினார். "வேலைக்குப் போகாமல் இங்கு வந்து இருக்க வேண்டியது இல்லை" என்று இன்னும் சிலருக்கு அறிவுரை புகட்டினார்.

கால்மணி நேரம் மைசூர் ரசிகர்களுடன் கலந்து உறவாடிய அந்தச் சந்திப்பு மக்கள் மத்தியில், அதுவும் கர்நாடக ரசிகர்களுக்கு நடுவே எம்.ஜி.ஆரின் மதிப்பை மேலும் உயர்த்துவதாக இருந்தது.

சமீபத்தில் கர்நாடகத்தில் நடைபெற்ற தேர்தலில் தோல்வியடைந்த முன்னாள் முதல்வர் குண்டு ராவ் அப்போது அரசியலில் அவ்வளவாக ஈடுபாடு கொண்டிருக்கவில்லை.

எம். ஜி. ஆரின் பரம ரசிகர் அவர். (ஏன், இப்போதும்தான்) மைசூர்ப் பகுதியில் எம். ஜி. ஆர். அவுட்டோர் படப்பிடிப்புக்கு வருகிறார் என்றால், தானே முன் நின்று அதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பார்.

மேலே குறிப்பிட்ட சம்பவத்தின் போது குண்டு ராவ் எம். ஜி. ஆரைப் பார்க்க ஸ்டுடியோவுக்கு வந்தபோது மக்கள் மத்தியில் மக்கள் திலகம் நின்று கொண்டிருப்பதைக் கண்டு பிரமித்தார். எம். ஜி. ஆர். ரசிகர்களினால் பெரிய அளவில் ஈர்க்கப்பட்டிருப்பதை அப்போது குண்டு ராவ் தன் இதயக் காமிராவில் படம் பிடித்து வைத்துக் கொண்டார்.

# 17

'நேற்று—இன்று—நாளை' படப்பிடிப்பு. நடிகர் அசோகனின் சொந்தத் தயாரிப்பு சத்யா ஸ்டுடியோவில் நடந்து கொண்டிருந்தது. அப்போது நான் சென்று இருந்த போது வேறு சில பத்திரிகை நிருபர்களுடன் எம். ஜி. ஆர். பேசிக் கொண்டு இருந்தார்.

ஒரு சினிமா நடிகரின் உரையாடலாக அது இல்லாமல் தேர்ந்த அரசியல்வாதியின் பேச்சாக இருந்தது. தமிழக அரசியல் மட்டுமல்ல, உலக அரசியல் வரை தெளிவாக, கருத்தாழத்துடன் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார் மக்கள் திலகம்.

பேச்சுக்கு நடுவே எம். ஜி. ஆர். என்னைக் கவனித்து விட்டு, "என்ன ஓரமாக ஒதுங்கி இருக்கிறீர்கள்! அரசியல் உங்களுக்குப் பிடிக்காதா? எப்படி இருந்தாலும் சரி, இப்படி வாருங்கள்" என்றார் புன்சிரிப்புடன். அவருடன் பேசிக் கொண்டு இருந்தவர்கள் யு. என். ஐ. செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த நிருபர்கள் என்று எனக்கு நினைவு.

அதாவது 'நேற்று' அரசியலைப் பேசி, 'இன்றைய' அரசியலை விளக்கி, 'நாளைய' அரசியல் எவ்வாறு அமையும் என்று அவர் சொல்லிக் கொண்டிருந்த நேரத்தில்—

அந்தச் செய்தி வந்தது!

எம். ஜி. ஆர். தி. மு. கழகத்திலிருந்து விலக்கப்பட்டார் என்பதுதான் அந்தச் செய்தி!

எம். ஜி. ஆரைச் சுற்றி இருந்தவர்கள் திடுக்கிட்டார்கள். சூழ்நிலையே மாறிப் பரபரப்பு ஏற்பட்டது. "அப்படியா?" என்று சில நம்பிக்கையற்ற குரல்கள்; "எப்படி முடியும்?" என்று சில உறுமல்கள்,

ஆனால் எவ்விதமான பதற்றமும், படபடப்பும், கோபமும், தாபமும், தவிப்பும், கலக்கமும், சலனமும் இல்லாமல் எம்.ஜி.ஆர். அங்கிருந்த பத்திரிகைக்காரர்களைப் பார்த்து என்ன சொன்னார் தெரியுமா?

"வாருங்கள், சாப்பிடப் போகலாம். இன்றுதான் எனக்கு மிகவும் மகிழ்ச்சி தரும் நன்னாள்."

சிறிது கூட வருத்தத்தின் சாயல் தெரியாமல் எப்போதுமுள்ள உற்சாகத்துடன் அப்போது எம். ஜி. ஆர். இருந்த நிலை கண்டு அங்கிருந்த பத்திரிகை நிருபர்கள் வியப்பும், திகைப்பும் அடைந்தார்கள்.

"நீதி கேட்டேன். தண்டனை தந்து விட்டார்கள்" என்றார் எம் ஜி. ஆர்.

எதற்கு நீதி?

திருக்கழுக்குன்றத்தில் நடைபெற்ற சிறப்பு மிகுந்த தி. மு. க. மாநாட்டு வசூல் கணக்கு என்ன என்று கேட்டார். கேட்டவரிடம் கேட்கப்பட்டவருக்குக் கோபம்!

விளைவு?

எம். ஜி. ஆரை தி.மு.கழகத்திலிருந்து வெளியேற்றி விட்டார். "இது நீதியல்ல" என்று கொதித்தவர்கள் ஏராளம். 'எம்.ஜி.ஆர். இல்லாமல் தி. மு. கழகமா?' என்று கேட்டவர்கள் ஏராளம்; ஏராளம்.

அதன் எதிரொலி தமிழகம் எங்கும் கேட்டது. 'இனி எம். ஜி. ஆர்?' என்ற அர்த்தமுள்ள வினாவும் எழுந்தது.

சென்னை சட்ட மன்றத்தில் அதற்குப் பிறகு ஒரு நாள் எம். ஜி. ஆர். எம்.எல்.ஏ. பேசினார். பேச்சா? இல்லை. சுடுகணைகள்! சூறுவளிக் கருத்துக்கள்! சட்ட மன்றத்தில் எம். ஜி. ஆர். சும்மா

உட்கார்ந்து இருக்கிறாரே, பேசவே இல்லையே என்று கேட்டவர்கள் அசந்து போனார்கள்.

ஆளும் கட்சியாக இருந்த தி. மு. க. வின் எதிர் வரிசையில் எம். ஜி. ஆர். அமர்ந்து முதல்வர் கலைஞரின் சில சீர்குலைவுத் திட்டங்களை, ஊழல்களை எடுத்துக்காட்டி விளாசித் தள்ளினார். அதுவரை சட்ட மன்றத்தில் பேசாத எம். ஜி. ஆர். இடி முழக்கமெனப் பேசினார்.

எம் ஜி. ஆர். விலக்கப்பட்டதைக் குறித்து அரசியல் மேதை ராஜாஜி விடுத்த ஓர் அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்:

''எம். ஜி. ஆரை தி. மு. கழகத்திலிருந்து விலக்கியது அண்ணாதுரை அவர்களையே விலக்கியது போல ஆகும்.''

நல்லவற்றையே நினைத்து. நல்லதையே செய்து வரும் ஒரு தூய்மையானவரை கலைஞர் சர்வாதிகாரி போல நடந்து கொண்டு தி. மு. கழகத்திலிருந்து நீக்கியது அநியாயம் என்ற உணர்வே தமிழகம் எங்கும் நிலவியது. அது பற்றிப் பட்டி, தொட்டி எல்லாம் பேசினார்கள்.

ஏற்கனவே எம். ஜி. ஆரைப் பற்றி இரண்டு முறை மனத் தாங்கலுடன் பேசியிருக்கிறார்கள் லட்சோப லட்சம் பேர்.

சீர்காழியில் நாடகத்திற்கு நடுவே நடிகர் குண்டுமணி எம். ஜி. ஆரை மேலே தூக்கி பளுத் தாங்காமல் கீழே போட்டு விடவே, முழங்காலுக்குக் கீழே எலும்பு முறிந்து சில மாதங்கள் படுத்துக் கிடக்க நேரிட்டது. அப்போது மக்கள் கவலையோடு பேசினார்கள்.

எம். ஆர். ராதா, கைத்துப்பாக்கியால் ராமாவரம் தோட்டத்து இல்லத்தில் புரட்சி நடிகரைச் சுட்டாரே, அப்போது ரசிகர்கள் பெருங்கவலையோடு அவரது உடல் நிலை பற்றி விசாரித்தார்கள்.

இது மூன்றாவது கவலையாக மக்கள் மத்தியில் பேசப்பட்டது. அதற்கு எல்லாம் பதில் சொல்வது போல, ''ஒரு கழகத்திலிருந்து நான் விலக்கப்பட்டிருக்கிறேனே தவிர, உங்கள் இதயங்களில் இருந்து அல்ல. நான் எங்கு இருந்தாலும் உங்களுக்கு எல்லாம் தொண்டு செய்து கொண்டே இருப்பேன்'' என்று அறிக்கை விட்டார்.

அதற்குப் பிறகு எம். ஜி. ஆரிடம் சில சிந்தனைகள் — ஆத்ம சிந்தனைகளாக எழுந்தன.

'இனிக் கலைத் தொடர்பா? புதுக் கட்சித் தொடக்கமா?'

இதற்கு எல்லாம் பதிலாக அமைந்தது 1972 அக்டோபர் மாதம் பதினாறும் நாள். அன்றுதான் அண்ணா தி. மு. கழகம் துவக்கப்பட்டது.

தி. மு. கழகத்திற்கு முன்னால் அண்ணாவின் பெயரை இணைத்துப் புதுக் கட்சி தொடங்குவதில் அவருடைய அரசியல் ஞானம் பளிச்சிட்டது.

அண்ணாதான் அரசியல் வழிகாட்டி; அவரது பெயரை முன்னால் வைத்து ஒரு கட்சி தொடங்குவதே சரி என்ற புரட்சி நடிகரின் முடிவைப் பலர் வரவேற்றார்கள்.

ஏராளமான பேர் அண்ணா தி. மு. க.வில் சேர்ந்தார்கள். குறுகிய காலத்தில் அந்தக் கழகம் வளர்ந்தது. கலைஞரின் போக்கைக் கண்டு உள்ளூரப் பொருமிக் கொண்டிருந்த பல தி. மு. க. பெருந்தலைவர்கள் அ. தி. மு. க.வில் சேர்ந்தார்கள். எம். ஜி. ஆரின் கழகம் அரசியலில் எப்படிப்பட்ட செல்வாக்கைப் பெற்றது என்பதற்கு இரண்டு சான்றுகள் கிடைத்தன. ஒன்று: திண்டுக்கல்லில் நடைபெற்ற புது டில்லிப் பாராளுமன்றத் தேர்தலில் அ. தி. மு. க வேட்பாளர் வெற்றி பெற்றது.

இரண்டு: அருப்புக்கோட்டையில் சட்ட மன்ற வேட்பாளராக எம்.ஜி.ஆர். நின்று பெரிய அளவில் வெற்றி பெற்றது. வேறு யாருக்கும் அவ்வளவு வாக்குகள் கிடைக்கவில்லை. மாபெரும் வெற்றி, புதுக்கட்சிக்கு மக்கள் வாரி வழங்கிய ஆசி என்று சொல்லும்படி இருந்தது எம்.ஜி ஆர். அங்கு பெற்ற வெற்றி!

அது மட்டுமல்ல, சட்ட மன்றத் தேர்தலில் 127 இடங்களை அ. தி. மு. க. வென்று, மக்கள் யார் பக்கம் பெருவாரியாக இருக்கிறார்கள் என்பதைப் புரிய வேண்டியவர்களுக்குப் புரிய வைத்தார் எம். ஜி. ஆர்.

புரட்சி நடிகர் புரட்சித் தலைவரானார். புரட்சிகரமான தமிழக முதல்வரானார்.

'நடிகர் நாடாள முடியுமா?' என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலாக இதோ உலகமெல்லாம் ஒப்புக் கொள்ளப்பட்ட கறை படாத கையுடன் பலரது நம்பிக்கையின் சின்னமாகத் திறமையாக ஆட்சி செய்து வருகிறார் எம். ஜி. ஆர்.

இப்போது கேரள ஆளுனராக இருந்து வரும் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள் ஒரு சமயம் சொன்னார். "எம்.ஜி ஆர். சினிமாப் படங்களில் நல்லவராகத் துலங்கிடும் கதாபாத்திரங்களையே தேர்ந்தெடுத்து நடித்து வந்திருக்கிறார். நடிப்பில் கூட அவரைத் தவறான மனிதராக நாம் பார்த்தது இல்லை. அந்த உயர்ந்த இலட்சிய உணர்வைத்தான் அவர் தமிழக முதல்வரான பிறகும் பார்க்க முடிகிறது."

இவர்தான் நான் கண்ட எம். ஜி. ஆர்.






ISI தர முத்திரை
பெற்றது
விநிபா
சந்தன
முகப்பவுடர்
VINIBA
SANDALIZED
LUXURY
TALC
VINIBA PRODUCTS
VINIBA
TOILET POWDER
விநிபா சந்தன முகப்பவுடர் தரமாகத்
தயாரிக்கப்படுகின்றது. சான்ருக இப்போது
I. S. I.யின் தரமுத்திரை பெறுகின்றது.
சருமத்திற்கு மென்மையும், பொலிவும் அளிக்கவல்ல
தூய 100% மைக்ரோஃபைன் செய்யப்பட்ட
மைசூர் சந்தனம்,
இந்தியாவின் அபூர்வ மூலிகைகள்,
மேனுட்டு வாசனை திரவியங்கள்,
உயர்ந்த அத்தர் வகைகள்,
தூய புனுகு, ஜவ்வாது அரகஜா
இவற்றை ஒருங்கே கலந்து
நவீன விஞ்ஞான ரீதியில்
தயாரிக்கப்படும்
நறுமணம் கமழும்
பவுடர் விநிபா.
IS 3959
ISI
CM/L/8273
விநிபா ப்ராடக்ட்ஸ்
"கோகுல் கார்டன்ஸ்"
கும்பகோணம்
mohan